அடிப்படையும், அவதானமின்மையும் புவிசார் தக்வல் தொழினுட்ப முறைமையின் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு சரியான அமைவிடம் பெறப் படுவதுடன் கடல்மட்ட உயரங்களும் கருத்தில் உள்வாங்கப்படுதல் விசேட அம்சமாகும். கொள் வனவு செய்யப்பட்ட அமைவிடம் நிறுவப்படவுள்ள கைத்தொழிற்சாலைக்கு பொருத்தமான வளங்களை கொண்டுள்ளதா? என்பதை அறிவதற்கு புவியியல்சார் சாதனங்கள் மட்டுமன்றி புவிசார் தகவல் தொழினுட்பமும் அவசியமாகும்.

உதாரணமாக, குடிநீர் தொழிற்சாலைகள் அமைவ தற்கும் அவற்றுடன் சார்பான விற்பனைகளுக்கும் புவிசார் தகவல் தொழினுட்பமுறைமை பாரியள வில் பங்குவகிக்கிறது. நீர் வளம் கொண்ட பிரதேச மானது தெரிவு செய்யப்படுவதிலிருந்து சுத்திகரிக் கபட்ட நீரானது பொதியாக்கம் செய்யப்பட்டு சந்தைப்படுத்தல் வரை புவிசார் தகவல் தொழினுட்பமின்றி செயற்படுத்துவதானது பாரியளவு பொருளாதார இடர்பாட்டினை தரவல்லது. ஆயினும் இத் தொழினுட்பத்தினூடாக செய்மதிமூலம் புவிசார் இடப்பரம்பல் அடையாளப் படுத்தப்படுவதால் சுற்றா டல் ரீதியான பேண்தகு நிலைமை காணப்படும்.


மேலும் புவிசார் தகவல் தொழினுட்பமுறைமைச் சந்தையானது சூழல் மாசடைதலுக்கு ஏதுவான காரணிகளை முன்கூட்டியே அனுமானிக்க ஏதுவாக அமைவதனால் சனத்தொகைப் பரம்பல் கூடிய இடங்களிலும் சூழல் மாசடைதல் தவிர்க்கப்படு கின்றது அல்லது பெரும்பாலான அளவில் குறைக்கப்படுகின்றது. சுற்றாடல் தாக்கமதிப்பீட்டு அறிக்கையானது (EIA) பிரத்தியேகமாக புவிசார் தகவல் தொழினுட்பமுறைமையுடன் இணைக்கப் படுவதன் மூலம் சூழல் மாசடைதல், காலநிலை மாற்றங்களினால் அப்பிரதேசங்களில் உருவாக வல்ல எதிர் விளைவுகள் என்பன முன்கூட்டியே அறியப்பட கூடியளவில் பாரதூரமான விளைவுகள் தவிர்க்கப்படுகின்றன.



கிழக்கிலங்கையானது நாட்டின் விவசாயத்துறைக்கு பாரிய பங்களிப்பினை வழங்குகின்ற பிரதேசமாகும். விவசாயச் செய்கைக்கு பொருத்தமான இடப்பரம்பல், மண்ணின் கட்டமைப்பு, படையமைப்பு என்பன மிகவும் இலகுவாக இம்முறைமை மூலம் அடையாளப்படுத்தப் படுவதனால் பிரதேசரீதியான பயிர்ச்செய்கையின் விளைச்சலும் தரமும் பன்மடங்கு விரிவாக்கப்படுகின்றது. இதன் மூலம் விவசாய நிலங்கள் கைத்தொழில் வலயங்க ளுக்குள் உள்வாங்கப்படுவது தடுக்கப்படுகின்றது. பேண்தகு நிலப்பயன்பாடு, நீண்டகால நிலப் பாதுகாப்பு மற்றும் நிலப்பாவனை என்பன இம்முறைமை மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன. அத்துடன் கைத்தொழிற்துறையை அண்டிய நகர மயமாக்கலில் புவிசார் தகவல் தொழினுட்பமுறை மையானது முக்கிய பங்காற்றுகின்றது. இதன் மூலம் பாதுகாப்பான மக்கள் குடியேற்றங்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன் தேவையற்ற அனர்த்தங்களும் தவிர்க்கப்படுகின்றன.

இவ்வாறான பல பின்னடைவுகளை தடுப்பதற்கான எவ்விதமான தாக்கங்களுமின்றி இயற்கையுடன் ஒன்றிணைந்துள்ள குறுகியகால செயற்பாடே புவிசார் தகவல் தொழினுட்பமுறைமை ஆகும். ஆகவே, புவிசார் தகவல் தொழினுட்ப கற்கைகள் மூலம் கைத்தொழில் மயமாக்கலின் பொருளாதார முரண்பாடு மற்றும் இடர்பாடுகள் நீக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

**இ. டெலினாபிரின்ஸ் ரூ சு. டசினா**
விவசாயபொறியியல் திணைக்களம்
விவசாயபீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை





## மரவேலை மற்றும் தச்சுத் தொழிலும் கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் மரவேலை துறைசார் செயற்பாடுகளும்

கற்காலம் தொடக்கம் தற்காலம் வரைக்கும் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்துகொண்டிருக் கும் மனிதனது வாழ்வில் மரங்கள் இன்றியமையாத னவாக காணப்படுவது எவராலும் மறுக்கமுடியாததாகும். ஆரம்பகால மனிதன் மரத்தினை வாழும் இருப்பிடமாக பயன்படுத்தினான். காலப்போக்கில் அதன் பாகங்களைக் கொண்டு இருப்பிடத்தை அமைக்கும் அளவிற்கு மனித சமுதாயம் மாற்றம் பெற்றதுடன், அதன் மூலம் தனது சுய தேவையை பூர்த்திசெய்யவதற்கும் பழகிக்கொண்டான். தற்காலத்தில் மரத்தை தனது பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்துவதோடு, சுயதேவை முறை மாற்றமடைந்து பல்வேறுபட்ட வழிமுறைகளினூடாக மரவேலைத் தொழிற்பாடுகள் விருத்தியடைந்துள்ளதை அவதானிக்கமுடிகின்றது. அந்தவகையில் தச்சுத் தொழிலை பயன்படுத்தி தங்களது இருப்பிடங்களை அமைக்கவும், தனக்குத் தேவையான பொருட்கள், உபகரணங்களை செய்துகொள்ளவும், அலங்கார வேலைப்பாடுகளை செய்துகொள்ளவும் மரம் பயன்படுத்தப்படுகின்றது.


எமது திணைக்களத்தை பொறுத்தவரையில் நெசவுத் தொழில், தும்புத் தொழில், தச்சுத் தொழில், மட்பாண்டத் தொழில் போன்ற பல்வேறுபட்ட தொழில் பயிற்சிகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவரு கின்றன. அந்தவகையில் இவற்றுள் தவிர்க்க முடியாத மிகமுக்கியமான இடத்தில் தச்சுத்தொழில் காணப்படுகின் றது. இத்தச்சு தொழிலானது சுயமான வகிபாகத்தை கொண்டிருப்பதோடு ஏனைய கிராமிய கைத்தொழில் வகைகளுக்கு உறுதுணையாகவும் இருந்துவருகின்றது.

மத்திய அரசின் கீழ் இயங்கி வந்த மேற்படி துறைகள் சார் வேலைப்பிரிவுகளானது ஒரு திணைக்களமாக மாற்றியமைக்கப்பட்டு பின்னர் காலப்போக்கில் மாகாணசபையின் கீழ் கொண்டுவரப்பட்டது. தற்போது மாகாண சபையின் முக்கியமான ஒரு அங்கமாக கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் இயங்கிவருகின்றது. ஆரம்பத்தில் இருந்தே இத்திணைக்களத்தின் செயற்பாடுகளில் தச்சுவேலை ஒரு முக்கிய இடத்தைப் பெற்று வந்திருக்கிறது.

இச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக எமது திணைக்களத்தின் கீழ் பல தச்சு நிலையங்கள் ஆரம்பத்தில் செயற்பட்டுவந்தாலும் தற்போது அவற்றில் சில தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. எனினும் கல்லடி, வாழைச்சேனை, கல்லாறு, வெகரங்கடகொட, செல்வநாயகபுரம், பதவிசிறிபுர தச்சுநிலையங்கள் தற்போதும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஆரம்ப காலங்களில் இத்தச்சு நிலையங்களில் பாரம்பரிய மரவேலை ஆயுதங்களை பயன்படுத்தி பயிற்சிகள் நடாத்தப்பட்டுவந்ததுடன் உற்பத்திகளும் மேற்கொள்ளப் பட்டு வந்தன. பின்னர் திணைக்களம் ஊடான மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்களினதும், சில அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் நிதி ஒதுக்கீடுகள் மூலமாக தச்சு நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டதுடன், தச்சுவேலைக்கு தேவையான நவீன ஆயுதங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. தேவையான

மூலப்பொருட்கள் இதனூடாக கொள்வனவு செய்யப்பட்டு, நிலையத்தில் இருப்பில் வைக்கப்பட்டு, தேவைக்கேற்ப உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. அத்துடன் அரச நடைமுறைகளுக்கேற்ப உற்பத்தி கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அலுவலக தளபாடங்கள், பாடசாலைகளுக்கு தேவையான உபகரணங்கள், தளபாடங்கள் போன்றன உற்பத்தி செய்யப்பட்டு தரத்துடனும் குறைந்த விலையிலும் வழங்கிவைக்கப்பட்டன.



பயிற்சிநெறிகளுக்காக பயிற்சிக்காலம் தற்போது ஆறு மாதங்களாக காணப்படுகின்றமையால் ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டு, பயிற்சிகளின் முடிவில் செய்முறை மற்றும் பாடவிதான எழுத்துப் பரீட்சைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பயிற்சிபெறும் ஒரு பயிற்சியாளருக்கு ஒருநாளுக்குரிய ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 150/= திணைக்களத்தினால் வழங்கப்பட்டுவருகிறது. பரீட்சைகளில் சித்தியடைபவர்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சான்றிதழைப் பெற்றுக்கொள்வர்.

எமது திணைக்களத்தில் பயிற்சிபெறும் பயிற்சியாளர்கள் பயிற்சியின் பின்னர் தச்சு சம்பந்தமான பூரண அறிவையும் போதியளவு தொழிற்திறன் அனுபவத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். எமது பயிற்சியாளர்களுக்கு மேலதிகமாக வேறு அரச, அரசசார்பு நிறுவனங்களில் பயிற்சிபெற்ற பயிலுனர்களும் வேலைத்தளப் பயிற்சியை பெற்றுக்கொள்ளும் பொருட்டு எமது தச்சு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதுண்டு.

இவ்வாறான பயிற்சிநெறிகளில் ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டு பயிற்சிகளை பெற்றுக்கொள்வதனால் சுயதொழில் மற்றும் வேலைகொள்வோர் ஊடாக அவர்களது தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கப்படுவதுடன், அவ்வாறில்லாது வேறு தொழில்களில் அமர்ந்துகொள்ளும் சந்தர்ப்பங்களில் கூட தமது சொந்த பயன்பாடுகளுக்கான சில தச்சுவேலைகளை தாங்களே செய்துகொள்ளத் தக்க பயிற்சியும் ஆற்றலும் அவர்களுக்கு கிடைத்து விடுகின்றது. இதற்குமேலாக இப்பயிற்சிகளின் பின்னர் திணைக்களத்தின் தேவைக்கேற்ப பயிற்சிபெற்ற பயிற்சியாளர்களுக்கு துண்டு அடிப்படையில் வேலைவாய்ப்புகளும் வழங்கப்படுவதுண்டு.

இவ்வாறு பயிற்சிநெறியினை பூர்த்திசெய்த பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றன. இவர்கள் இச்சான்றிதழையும், பெற்றுக்கொண்ட போதிய தொழில் அனுபவத்தையும் ஆரம்ப தகைமைகளாக கொண்டு முன்கற்றல் நடைமுறையின் கீழ் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் RPL சான்றிதழையும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் தேசிய தொழில்நுட்ப கல்லூரிகளில் நடைபெறும் தச்சு மற்றும் மரவேலை கற்கைநெறிகளுக்குரிய அனுமதியை பெற்றுக்கொள்ளவும் இச்சான்றிதழ்கள் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கின்றது.

தற்போது எமது பயிற்சிநெறிகளின் செயற்பாடுகள் விரிவாக்கம் செய்யப்பட்டு தேசிய தொழில்சார் தகைமை மட்டம் III (NVQ Level III) இனை வழங்குவதற்குரிய மரவேலை கைவினைஞர் சான்றிதழ் (Certificate of Wood Craftsman) பயிற்சிநெறியும் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப் பயிற்சிநெறி திணைக்களத்திற்கு உட்பட்ட கல்லடி அரச மின்தச்சுப் பயிற்சிப் பாடசாலையில் நடாத்தப்படுவதுடன், P 20/0065 என்னும் பதிவிலக்கத் தின் கீழ் தேசிய தரம் C யினூடாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறி மூன்றாம்நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தேர்ச்சி நியமத்தினை (National Competency Standard) பாடத்திட்டமாககொண்டு ஆறு மாதத்திற்கு வழங்கப்படுகின்றது. இப்பயிற்சிநெறிக்குரிய நற்சான்றுப்படுத்தல் (Accreditation) நடவடிக்கைகளில் அனேகமானவை தற்போது பூர்த்திசெய்யப்பட்ட நிலையில் உள்ளன.



தற்போது எமது தச்சு நிலையங்களில் மரத் தளபாடங்கள், கட்டிட தேவைக்கான பலகை, குத்தி மற்றும் கட்டி வகைகள், வீட்டு பயன்பாட்டுக்கான பொருட்கள், மரக் கடைச்சல்கள், மரத்தாலான பூக்கள், சுவர் அலங்காரப் பொருட்கள், மரத்தினாலான நெகிழ்வுத் தன்மையுடைய உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், வாத்தியக் கருவிகள், சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அலங்காரப் பொருட்கள் என பல்வேறுபட்ட மர உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் பயிற்சிகளும் உற்பத்திகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நெசவு, தும்பு மற்றும் பிற தொழில்களுக்கு தேவையான தறி, கயிறு திரிக்கும் இயந்திரம் உட்பட மர இயந்திரங்கள், உபகரணங்கள் பலவும் தச்சு பயிற்சிநிலையங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்படுவதுடன், அவற்றின் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் எதிர்காலத்தில் ஏனைய திணைக்களங்களுடனும் அரச, அரச சார்பற்ற அமைப்புகளுடனும் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் தற்போது கிராமிய தொழிற்துறை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் தச்சு மற்றும் மரவேலை தொழில் கற்று வெளியேறும் பயிற்சியாளர்களுக்கு பரந்த அளவிலான தொழில் வாய்ப்புகளும் அதனூடாக அவர்களது வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் மேம்படுவதற்கான சந்தர்ப்பங்களும் மிகப் பிரகாசமாக அமையவிருக்கின்றன என்பது தெளிவானதாக புலனாகின்றது.

**திருமதி. ஆ. வரகுணராகவன்,**
முகாமைத்துவ உதவியாளர்,
கிராமியத் தொழிற்துறைத் திணைக்களம்,
மட்டக்களப்பு.

## தேசிய அருங்கலைகளும் அவற்றை வளர்த்தெடுப்பதிலும், பேணிப் பாதுகாப்பதிலும் தேசிய அருங்கலைப் பேரவையின் பங்களிப்பு.



இலங்கையின் கலைத்துறைசார் தயாரிப்புகள் தன்னகத்தே நாட்டின் இன்றியமையாத வளமான தத்துவம், நாகரீகம், அதன் கலாசாரம் மற்றும் அதன் நடைமுறைகளை கொண்டமைந்ததாக உள்ளன. எமது மரபு ரீதியான திறன்களும், கைப்பணிகளும் அரச, சமய, அதேபோல் பொதுமக்களின் தேவைப்பாடுகள் என்பவற்றிடமிருந்து தாக்கத்தை எப்போதும் பெற்றிருக்கின்றன. இந்த வகையில் கைப்பணிகளின் அவசியம் மக்களின் நாளாந்த தேவைகள் மூலம் வளர்ச்சியடைந்தன. அது அவர்களின் வாழ்க்கை, மரபுகள், மக்கள் அனுஷ்டானங்களின் அத்தியாவசியமான அங்க மொன்றாக மாறியுள்ளது.

கைப்பணிகள் என்பது பூரணமாக கையினால் அல்லது எளிய உபகரணங்களை மட்டும் பயன்படுத்தி ஒருவருடைய திறனினால் பயனுள்ள, அலங்காரமான, படைப்பாற்றலை வெளிப்படுத்தும், நுணுக்கமான, வடிவ அமைப்புடைய வேலை யொன்றை செய்தல் என்பதாகும். இது அருங்கலைப் பொருட்களின் மரபுரீதியான ஒரு பிரதான துறையாகும். இலங்கையின் கைப்பணிகள் பண்டைய நாகரீகங்களின் கிராமிய கைப்பணிகளில் ஆரம்ப மூலத்தை கொண்டு பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருந்து வருவதோடு ஏனையவை நவீன புத்தாக்கங்களாக அல்லது வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியொன்றில் ஆரம்பமாக நடைமுறைப்படுத்தப்பட்ட கைப்பணிகளின் பிரபல்யப்படுத்தப்பட்ட அம்சங்களாக உள்ளன.

அருங்காட்சிப் பொருட்களில் எமது வரலாறானது தொன்மையானதும் கீர்த்திமிக்கதுமாகும். அருங்கலைப் பொருட்களில் பதிவுசெய்யப்பட்ட எமது வரலாறானது கி.மு. 300 ஆம் வருடத்தில் ஆரம்பமாவதோடு இது நாள் வரை இடையுறாது தொடர்கின்றது. பொருளாதரத்தின் அத்தியவசிய அங்கமொன்றாக கைப்பணிகள் உள்ளடக்கியிருக் கின்றன. தொழில் வாய்ப்பு உருவாக்கத்தைப் பொறுத்தவரையில் அது விவசாயத்திற்கு அடுத்து இரண்டாம் நிலையில் காணப்படுகின்றது. இந்த வகையில் தொழில் முயற்சி துறை, மற்றும் சந்தைகள் என்பவற்றுக்கான வாய்ப்புக்களை துரிதப்படுத்து வதற்காக கைப்பணித் துறைக்கு புதிய வடிவங்கள், புதிய சிந்தனை, புதிய கருத்துக்களை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். கைப்பணியில் ஈடுபட்டுள்ள ஆட்கள் பயிற்சியின் மூலம் வித்தியாசமாக சிந்திப்பதன் ஊடாக உலக தராதரத்தை எட்டுவது சாத்தியமானதாக இருப்பதோடு, எமது கைப்பணிப் பொருட்கள் உலக சந்தைகளில் போட்டித்தன்மை உள்ளதாக இருப்பதற்கும் வசதியளிப்பதாக இருக்கும்.

தேசிய வளர்ச்சிக்கு உந்து சக்தியொன்றாக விளங்கும் கைப்பணிகளுடன் தொடர்பான விடயங்களை ஒருங்கிணைப்பதற்கு காணப்பட்ட அவசியத்தன்மையை கருதி இலங்கை அரசாங்கம் 1982 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் தேசிய அருங்கலைகள் பேரவையைத் தாபித்தது. இதன் நோக்கங்களாக கைப்பணிகளை ஊக்குவித்தல், விருத்தி செய்தல், வளர்த்தல், பேணிப் பாதுகாத்தல் என்பதாக இருப்பதோடு, கைப்பணியாளர்களின் சமூக, பொருளாதார அந்தஸ்தை உயர்த்துவதுமாகும்.

## தேசிய அருங்கலைகள் பேரவையின் பிரதான நோக்கங்கள்

- மரபு ரீதியான கலாசார பெறுமானங்களுடன் கைவினைத் திறன்களை பேணிப் பாதுகாத்தல் சுதேச கைப்பணிகளுக்கு ஆர்வமூட்டுதல், ஊக்கமளித்தல்.
- கைப்பணிகளை ஒழுங்கு முறைப்படுத்தல். கைப்பணியாளர்களின் சமூக, பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்தல்.
- கைப்பணியாளர்களின் தொழில்நுட்ப திறன்கள், அறிவை மேம்படுத்துதல்.
- கைப்பணிகளுக்கு தேவையான உள்ளூர் மூலப் பொருட்களை போதியளவு பெற்றுக் கொள்வதற்கு வசதியளிப்பதனூடாக கைப் பணியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவித்தல்




தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் உள்ளடக்கப்படும் கைப்பணித்துறைகள் 21 பிரதான பிரிவுகளாக வகுக்கப்பட்டு அவற்றின் கீழ் 57 உப பிரிவுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 21 பிரதான பிரிவுகள் கீழ்வருமாறு :

- களிமண் உற்பத்திகள்
- தும்பு, ஓலை, புல்சார்ந்த உற்பத்திகள்
- தும்பறை வடிவமைப்புக்கள்
- பிரம்பு, மூங்கில் குழாய் சார்ந்த உற்பத்திகள்
- உலோகக் கைப்பணிப் பொருட்கள்
- ஆபரணங்கள்
- முகமூடிகள், மற்றும் பாவைகள்
- செதுக்கிய முகங்கள்
- சங்கீத உபகரணங்கள்
- துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள்
- பட்டிக் உற்பத்திகள்
- ரேந்தை
- வெண்கல மற்றும் சேசத் உற்பத்திகள்
- மர உற்பத்திப் பொருட்கள்
- தோற்பொருட்கள்
- கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள்
- வரைபுகளும் சிற்பங்களும் (பாரம்பரியக்கலை)
- தென்னை, கித்துள், எள்ளு, பனை சார்ந்த உற்பத்திகள்
- நானாவித கைப்பணிப் பொருட்கள்
- நினைவுச் சின்னங்கள்

## தேசிய அருங்கலைகள் பேரவையால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள்

- கைப்பணிக் கைத்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கைப்பணியாளர்களை இனம் கண்டு அவர்களை பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்கல்
- கைப்பணியாளர்களுக்கு மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.
- கைப்பணியாளர்களுக்கான சுயதொழில் வசதித்திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், நலன்புரித்திட்டங்களை வழங்குதல்.



- ❒ புதிய கைப்பணி அபிவிருத்திச் சங்கங்களை உருவாக்குதலும், ஏற்கனவே உள்ளவற்றை மீளமைத்தல்.
- ❒ பாரம்பரிய கைப்பணி கிராமங்களை இனம் கண்டு அவற்றினை அபிவிருத்தி செய்தல்.
- ❒ கைப்பணியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கிராமத்தினை அமைத்தல், வர்த்தகச் சந்தையினை நடாத்துதல்.
- ❒ மாகாண, தேசிய ரீதியில் கண்காட்சிப் போட்டிகளை நடாத்தி சிறந்த கைப்பணியாளர்களை இனம் காணல், விருதுகள் வழங்கி கௌரவித்தல்
- ❒ வெளிநாடுகளில் நடைபெறும் பயிற்சிப்பட்டறைகள், கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தைகளுக்கு கைப்பணியாளர்களை அழைத்து செல்லல்.
- ❒ அடிப்படை தொழில்நுட்ப பயிற்சி (6-10 நாட்கள்), 15 நாட்களுக்கு மேற்பட்ட இடைநிலைப் பயிற்சிகளை வழங்குதல். (Conducting Basic Technology & Intermediate Training Work Shops)
- ❒ 6 மாதங்களைக் கொண்ட குருவினைப் பயிற்சி நெறியினை நடாத்துதல் (Conducting Master CraftsmenTraining Programme)
- ❒ கைவினைப் பயிற்சி நிலையங்கள் ஊடாக பயிற்சிகளை வழங்குதல் (Provide Training through crafts training centers)
- ❒ அருங்காட்சியகங்களில் பாரம்பரிய கைப்பணிப் பொருட்களை அழிய விடாது பேணிப்பாதுகாத்தல்

க.நவதர்ஷன்
உதவிப்பணிப்பாளர் ( வடக்கு , கிழக்கு மாகாணம்)
தேசிய அருங்கலைகள் பேரவை.

# தேர்ச்சிசார் பயிற்சி (Competency Based Training - CBT) மற்றும் அதனைப் பெற்றுக்கொள்ளும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள்



நாம் ஒவ்வொருவரும் மனதில் திடமாகப் பதித்துக்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு துறையில் திறமையும் கெட்டித்தனமும் உண்டென்பதாகும். பாடசாலைப் பருவத்தில் வெளிக்கொண்டுவரப்படாத எமது திறமையும் கெட்டித்தனமும் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பு வெளிக்கொண்டுவருவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம் உள்ளன. அதில் முக்கிய இடம் வகிப்பது தொழிற் பயிற்சி ஆகும்.

கற்றுக்கொள்ளலில் பல்வகை வேறுபாடுகள் உள்ளன. கட்புல மற்றும் செவிப்புல ஊடகங்களினால் (விரிவுரை) தூண்டுவிக்கப்படாத பலரின் கற்றுக்கொள்ளும் திறன், தொழில் செய்வதனால் பெறப்படும் தொழிற் பயிற்சியினால் தூண்டுவிக்கப்படுகிறது.

பாடசாலையில் கெட்டிக்காரராக வலம்வராத பலர் தொழிற் பயிற்சியினால் நிபுணர்கள் ஆக வலம்வருவதற்குக் காரணம் அவர்கள் தொழில் செய்வதனால் பெற்றுக்கொள்ளும் கற்றலே ஆகும். இன்றைய கைத்தொழில் மற்றும் வியாபார உலகினிலே இவ்வாறான பலர் நிபுணர்களாகவும் தொழிலதிபர்களாகவும் உள்ளனர். தொழிற் பயிற்சியின் மூலம் எமது திறமையையும் கெட்டித்தனத்தையும் வெளிக்கொண்டுவர முயற்சிக்காமல் எம்மில் பலர் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாக உள்ளது.

எமது விருப்பிற்கோ அல்லது வாழ்க்கைக்குத் தேவைப்படும் என நினைக்கும் தொழிற்துறையை நாம் எதிர்பார்ப்போம் எனில் அதற்குரிய முறையான தொழிற் பயிற்சியை பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இம்முறையான தொழிற் பயிற்சியை எங்கு, எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றி நாம் அனைவரும் தெரிந்து கொள்வது காலத்தின் தேவைப்பாடாகும்.

**தொழிற் பயிற்சிப் பாடநெறியொன்றைத் தெரிவு செய்கையில் பின்வரும் விடயங்களை நாம் கண்டிப்பாக கவனிக்க வேண்டும்.**

- தொழிற் பயிற்சி நிலையம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்யப்பட்டு பதிவிலக்கம் வழங்கப்பட்டுள்ளதா? (மாவட்டத்திற்கு மாவட்டம் பதிவிலக்க எண் வேறுபடும்)
- பதிவு செல்லுபடியாகும் காலம் மற்றும் பதிவிலுள்ள பாடநெறிகள் (சான்றிதழ் அல்லது டிப்ளோமா)
- பாடநெறி NVQ முறைமையில் இருப்பின் தராதர அங்கீகாரம் கிடைத்துள்ளதா என அறிந்துகொள்ள வேண்டும்.

NVQ முறைமையின் கீழ், பாடநெறியானது தராதர அங்கீகாரம் பெறப்பட்டு நடாத்தப்படுமெனில் அப்பாடநெறி தேர்ச்சிசார் பயிற்சி (CBT) முறைக்கமைய நடாத்தப்படுகின்றதென உறுதி செய்யப்பட்டுள்ளது.




ஓர் உண்மையான சூழ்நிலையில் எதுவித உதவியும் இன்றி கொடுக்கப்பட்ட வேலையை துல்லியமாகவும் திறம்படவும் செய்யக்கூடிய ஆற்றலையே தேர்ச்சி என்போம். ஏதேனும் ஒரு வேலையைச் செய்வதற்கு அவசியமான திறன், அனுபவ அறிவு மற்றும் மனப்பான்மை ஆகியவற்றின் திரட்டே தேர்ச்சியின் எளிய அறிமுகமாகும்.

கைத்தொழிற்துறைக்குத் தேவையான தேர்ச்சிகள் தேசிய தேர்ச்சித் தராங்களால் (National Competency Standards – NCS) கண்டறியப்படும். தேசிய தேர்ச்சித் தராங்களை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கமைய தேர்ச்சிசார் பயிற்சி பாடநெறி நடாத்தப்படும்.


தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி பாடநெறி மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் தராதர அங்கீகாரம் செய்யப்படும். அதாவது NVQ சான்றிதழ் விருதளிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவதாகும். தேர்ச்சிசார் பயிற்சியின் போது மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீடு செய்யப்படுவதுடன் NVQ இறுதிக் கணிப்பீட்டிற்கு மாணவர்கள் தயார்ப்படுத்தப்படுகின்றனர்.

தேர்ச்சிசார் பயிற்சியில் ஆசிரியர்- மாணவர் விகிதம் பெரும்பாலும் 1:15 என்ற வகையில் பயிற்சி நடாத்தப்படுவதால் அனைத்து மாணவர்களுக்கும் போதனாசிரியரின் கவனம் குறைவில்லாமல் கிடைக்கும். கைத்தொழிற்துறைக்குத் தேவையான தேர்ச்சிகள் கிடைக்கப்படுவதனால் தொழில் வாய்ப்பு கிடைத்தல் அதி உச்ச சதவீதத்தில் பேணப்படுகிறது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
நிபுணதா பியச (03 ஆம் மாடி), இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு - 05
தொலைபேசி இல. 011-5849291
தொலைநகல் : 011-2555007
மின்னஞ்சல்: info@tvec.gov.lk
இணைய தளம்: www.tvec.gov.lk



# கைவினை மற்றும் கலைநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறையை கவரும் நோக்கில் கிராமங்களில் கைத்தொழிலை மேம்படுத்தும் செயற்திட்டம் – 2015



உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு கைப்பணி மற்றும் கைத்தறி உற்பத்திகளை விற்பனை செய்தலை மேம்படுத்தும் நோக்கில் கிராம அடிப்படையிலான கைத்தொழில் அலகுகளை உருவாக்குவதற்கான செயற்திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இச்செயற்திட்டமானது மூன்று பிரதான உப செயற்திட்டங்களை தன்னகத்தே கொண்ட ஒரு முழுமையாக தொழில் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டமாக காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலான உற்பத்திகளை மேற்கொள்ளத்தக்க தொழில் பயிற்சிகளை வழங்குவதன் ஊடாக மாவட்டத்தில் மூன்று மாதத்தினுள் நூறு தகைமைசார் தொழிலாளர் படையொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. பயிற்சியாளர்கள் சார்ந்த சமூக அமைப்புகளுக்கு தொழில் முயற்சிக்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்கிவைப்பதன் ஊடாக பயிலுனர்கள் அவரவர் வீடுகளில் வைத்து குறைந்த உற்பத்திச் செலவில், அதிக வருமானம் ஈட்டத்தக்க, சந்தை வாய்ப்பு மிக்க சுற்றுலாத்துறையினரை கவர்ந்திழுக்கத்தக்க சுயதொழில்களை செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இச்செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகளுள் ஒன்றாக பாசிக்குடா மற்றும் ஏறாவூர் பிரதேசங்களில் கைத்தொழில் கிராம அலகுகளை தாபிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்கிராம அலகுகளில் கைப்பணி மற்றும் கைத்தறி உற்பத்திகளை மேற்கொள்வதற்கு தேவையான திறன்சார் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு தேவையான சந்தைவாய்ப்பு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. இதனடிப்படையில் ஐம்பது புதிய பயிலுனர்களுக்கு கல்குடா மற்றும் ஐயன்கேணி பிரதேசங்களில் அமைந்துள்ள தெரிவுசெய்யப்பட்ட சமூக அமைப்புகளினூடாக தேர்ச்சிபெற்ற வளவாளர்கள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படுவதோடு தரமான கைப்பணிப் பொருட்களின் உற்பத்தியை உறுதிப்படுத்தும் நோக்கில் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட வுள்ளன.

இச்செயற்திட்டத்தின் மற்றுமொரு பிரதான செயற்பாடாக வாழைச்சேனை மற்றும் கல்லடி பிரதேசங்களில் உள்ள கிராமிய கைத்தொழில் திணைக்கள பயிற்சி நிலையங்களில் ஐம்பது பயிலுனர்களுக்கு தொழில் நிபுணத்துவம் சார் விசேட





மேம்படுத்த முடிவதோடு வறுமை ஒழிப்பிற்கும் சமமான பிராந்திய அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யமுடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இச் செயற்திட்டம் கிழக்குமாகாண உள்ளூராட்சி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கிராமிய கைத்தொழில் திணைக்களத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பபடுகின்றது. இதற்கென மூன்று மில்லியன் ரூபாவினை இத்திட்டத்தின் அனுசரனையாளரான மத்திய சுற்றுலா அமைச்சு வழங்கியுள்ளது.

எதிர்வரும் காலங்களில் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு சுய தொழில்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை பாசிக்குடா பகுதியில் நடைமுறைப்படுத்தி அப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தையும் வருமானத்தையும் உயர்த்தும் செயற்திட்டமொன்று உருவாக்கப்படவுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் உற்பத்தியாளர்களின் வீடுகளின் அருகாமையில் தங்கியிருந்து கைப்பணி நுணுக்கங்கள், தொழில் முறைமைகள் மற்றும் தொழிலாளர் வாழ்க்கை முறைகளை அனுபவங்களின் அடிப்படையில் கற்றறிந்து செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி அதன் மூலமாக பிரதேச மட்ட பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறான சுயதொழில் வாய்ப்பை வழங்கக் கூடிய பல்வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் என்பது கிழக்கு மாகாணத்திலே வறுமை மட்டம் கூடிய மாவட்டமாக காணப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தை வறுமைப் பிடியிலிருந்து படிப்படியாக மீட்டெடுப்பதையும் பொருளாதார அபிவிருத்தியை துரிதமாக மேம்படுத்துவதையும் சாத்தியப்படுத்துவதாகவும், சுபீட்சமான எதிர்காலத்தை விரைந்து அடையக்கூடிய மூலோபாயமாகவும் இருக்கும்.

மற்றும் பெறுமதிசேர் பயிற்சிநெறிகள் வழங்கி வைக்கப்படுகின்றன. இவ்விரு பயிற்சி நிலையங்களினூடாக திணைக்களத்தால் வழங்கப்பட்டுவரும் வழமையான பாடநெறிக்கு மேலாக சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலான நிபுணத்துவம் மற்றும் பெறுமதிசேர் தும்பு மற்றும் நெசவு உற்பத்திகள் தொடர்பிலான பயிற்சி நெறிகள் நடைபெற்றுவருகின்றன.

அத்துடன் மேற்படி பயிற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி மற்றும் கைப்பணிப் பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்பு இணைப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள திணைக்கள விற்பனை நிலையத்தையும் தரமுயர்த்துவற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தின் தூரநோக்குள்ள செயற்பாடுகள் மூலம் தொழில் வாய்ப்புக்களையும் தனி நபர் வருமானத்தையும் அதிகரிப்பதனுடாக மனைப் பொருளாதாரத்தினை பலப்படுத்தி உள்ளூர் பொருளாதாரத்தினை

ந. தமிழ்ச்செல்வன்
பணிப்பாளர் திட்டமிடல்
முதலமைச்சு. கி.மா

# மட்பாண்ட உற்பத்தி பொருட்களும் கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் வகிபாகமும்

உலக வரலாறு மனிதனின் தோற்றுவாயிலிருந்து இன்றைய நவீனயுகம்வரை பல்வேறு மாற்றங்களை கடந்து வந்திருக்கின்றது. உற்பத்தி மற்றும் தொழில்துறை என்கின்ற எண்ணக்கருக்கள் ஆரம்பமான காலகட்டத்திலேயே மட்பாண்டதொழில் மற்றும் மண்சார் உற்பத்திப்பொருட்கள் தயாரிக்கப்பட ஆரம்பித்துவிட்டன எனலாம். குயவனின் சக்கரம் என்பதே ஆதிகால மனிதனின் முதலாவது தொழில்சார் பொறி என்றால் அது மிகையில்லை. நார்களிலும், பஞ்சுகளிலுமிருந்து உடையையும், மரங்களிலிருந்து உறைவிடத்தையும் தேட ஆரம்பிக்கும் முன் மனிதனுக்கு பசியெடுக்க ஆரம்பித்துவிட்டது. உணவை வைத்திருப்பதற்கும் உண்பதற்கும் நிலையான பாத்திரங்கள் தேவை என்கின்ற எண்ணம் தோன்றியபோது மட்பாண்டக் கலையின் அத்தியாவசியம் உணரப்பட்டது.

பூமித்தாயின் மடியில் கிடைக்கும் மண்ணை மூலப்பொருளாக கொண்டு மட்பாண்டங்கள் மற்றும் மண்சார் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைவினையாலும், கலைநயத்தாலும் மண் மாண்புற்று பல்வேறு பாத்திரங்களாகவும், உருவங்களாகவும், பொருட்களாகவும் மாற்றம் அடைகின்றது. பானை, முட்டி, குடம், கும்பம், கடம், கலயம், தொட்டி, தோண்டி, குளுமை, சட்டி, கோப்பை, உலைமூடி, அடுப்பு, சாடி, கூசா, குப்பி, குவளை, குத்துவிளக்கு, திரி விளக்கு, அகல்விளக்கு, உண்டியல் என பல்வேறு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன.

மட்பாண்டங்கள் மிகப் பழங்காலந்தொட்டு மக்கள் வாழ்க்கையின் அத்தியாவசியமான ஓர் உபயோகப் பொருள் வகுதியாக இனங்காணப்பட்டவை ஆகும். பொதுவாக நாம் பயன்படுத்தும் மட்பாண்டங்கள் சாதாரண களிமண்ணால் உருவாக்கப்படுபவை ஆகும். எனினும் வர்ணப்பூச்சு மட்பாண்டம்,



வெண்களி மினுக்கப் பாண்டம், தகர மினுக்கப் பாண்டம், கயிற்று மினுக்கப் பாண்டம் போன்ற விசேட களி மற்றும் வர்ணம் அல்லது இராசய பதார்த்தம் கலந்த மட்பாண்டங்களும் உண்டு. தற்காலத்தில் வெள்ளி, ஈயம், அலுமினியம், பித்தளை மற்றும் நண்ஸ்ரிக் ரெஃலான் (Non Stick Teflon) பாத்திரங்கள் மட்பாண்டங்களின் இடத்தை வெகுவேகமாக ஆக்கிரமித்து வருகின்ற ஒரு அபாயத்தை நாம் உணர்ந்துகொள்ள தவறுகின்றோம். குளுமையான மண்ணாலான மட்பாண்டங்களில் சமைத்து உண்பது, அருந்துவது உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் பொருத்தமானவை என தற்கால மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். மட்பாண்டங்களில் சமைக்கும்போது உணவுப் பண்டங்கள் எளிதில் பழுதடைவதிலை என்பதுடன் எதுவித இரசாயன நச்சுப் பதார்த்தங்களின் பாதிப்புகளும் உடலுக்கு சேர்வதுமில்லை.

இயற்கையாக கிடைக்கும் களிமண், சேம்புமண் மற்றும் பட்டு மணல் என்பவற்றில் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை நீருடன் சேர்த்து குழைத்து பிசைந்து வேண்டிய உருவத்தில் மட்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. சில குறிப்பிட்ட தேவைகளுக்காக களிமண்ணுடன் சேர்த்து வேறு சில கனிமங்களையும் கலப்பதுண்டு. வடிவமைக்கப்பட்ட உருவங்களை சூளையில் இட்டு உயர்ந்த

வெப்பநிலைக்கு சூடாக்கி மண்ணை இறுக்குதல், பலம்கூட்டுதல், உறுதியாக்குதல் முதலிய செய்கைகளுக்கு உட்படுத்தி மட்பாண்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. சூளைக்கு தீவைக்கும்போது தேங்காய் உரிமட்டைகள், வைக்கோல், உமி, சிறுவிறகு என்பன இடப்பட்டு சூடேற்றப்படும்.

மட்பாண்டங்களை தயாரிப்பதற்கு குயவச் சக்கரத்தை அடிப்படையாக கொண்ட பல்வேறு பொறிமுறைகள் தற்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சுழல்மனை, கைச்சுழல் பொறி, கால்மிதி பொறி, இருதிசைச்சுழல் மின்பொறி, ஒருதிசைச்சுழல் மின்பொறி முதலியன அவற்றுள் சிலவாகும். இப்பொறிகளுக்கு மேலதிகமாக தட்டுப்பலகை, தட்டுக்கல், கிள்ளுக்குச்சி, கொத்துக்கரண்டி, சிப்பிகள், காலுருட்டி கட்டை, கயிறு, மூங்கில், பூவரசஇலை, சாக்கு, கடகால், கோழி இறக்கைகள், அணில்வால் தூரிகை போன்ற சிறு பொருட்களும் மண்பாண்டங் களை அழகாகவும், நுட்பமாகவும், நேர்த்தியாகவும் தயாரிக்க உறுதுணையாக பயன்படுத்தப்படுகின்றன.

மட்பாண்டங்களை நிறமூட்டுவதற்காக சிரட்டைக்கரி (கறுப்பு), பச்சைமஞ்சள் (மஞ்சள்), செம்மண் (காவி), வாவரக்காச்சி இலை (பச்சை), காக்காய்பொன் (பொன்னிறம்), நாவல்கொட்டை (கருநாவல்) போன்ற இயற்கை பொருட்களை கலந்து இரசயான கலப்பற்ற இயற்கைவர்ண மண்பாண்டங்கள் தயாரிக்கப்படு கின்றன. மண்ணில் இருந்து மட்பாண்டங்கள் தவிர விளையாட்டுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், சிலைகள், பொம்மைகள், சுதைகள், முகமூடிகள், பல்வேறு வகைப்பட்ட உருவங்கள் மற்றும் ஓடு, செங்கல் களிக்கட்டி முதலிய கட்டிடப் பொருட்கள் என்பனவும் தயாரிக்கப்படுகின்றன.

மட்பாண்ட சிறுகைத்தொழிலை பாதுகாக்கும் முகமாகவும், அதனூடாக கிராமிய மட்டத்தில் தொழில்வாய்ப்பை ஏற்படுத்தும் முகமாகவும் கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் மூலம் மட்பாண்ட பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. கிராமிய தொழிற்துறை திணைக்க ளத்தின் ஊடாக கிழக்கு மாகாணத்தின் வெவ்வேறு இடங்களில் மட்பாண்ட பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டுவந்தன. எனினும் தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவு, ஏறாவூர், மாமாங்கம், வாழைச்சேனை ஆகிய இடங்களிலேயே மட்பாண்ட பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றில் போரதீவு மட்பாண்ட பயிற்சி நிலையத்தில் மட்டுமே தற்போது பயிற்சிநெறி வழங்கப்படு வருகிறது. ஆறு மாதங்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கு ஒரு அணிக்கு ஐந்துபேர் மாத்திரமே தெரிவுசெய்யப்படுவதால் ஒவ்வொரு பயிலுனர் மேலும் தனிப்பட்ட விசேட கவனம் எடுத்து பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

பயிற்சி பெற்று வெளியேறுவோர் சுயமாக மட்பாண்ட தொழிலை செய்து கணிசமான வருமானத்தை ஈட்டிவருவதாக அறியமுடிகிறது. பயிற்சிக்காலத்தில் அவர்களுக்கு நாளொன்று ரூபா.150 ஊக்குவிப்புபடி வழங்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உபகரணங்களும் இலசவமாக வழங்கிவைக்கப்படுவதுண்டு. பயிற்சி நிலையங்களில் பயிலுனர்களாக, தொழிலாளர் களாக காணப்படுவோரின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்பை ஏற்படுத்தி கொடுக்கும் பணியையும் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. திணைக்கள விற்பனை நிலையங்களிலும், வெளிச் சந்தைகளிலும் இவ் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய உதவியும், வழிகாட்டலும் வழங்கிவைக்கப்படுகின்றது.

முழுநேர ஜீவனோபாய தொழிலாக மட்பாண்ட தொழிலை மேற்கொள்பவர்கள் தற்போது அருகிவிட்ட நிலையில் தமக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரத்தில் வருமானத்தை ஈட்டித்தரும் ஒரு மார்க்கமாக மட்பாண் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பாரம்பரிய மட்பாண்டங்களான பாத்திரங்கள், பண்பாட்டு பாவனை பொருட்களுக்கு மேலதிகமாக தற்போது வீட்டு அலங்கார கைவினைப் பொருட்களும், சுற்றுலா பயணிகளை கவரத்தக்க சிறு மட்பாண்ட உற்பத்திகளும் அதிகளவு சந்தை வாய்ப்பையும் வருமானத்தை பெறும் சூழலை ஏற்படுத்தியுள்ளன.

# கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பங்களிப்பு



நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் துறைகளில் கிராமிய தொழிற்துறையும் ஒன்றாகும். தொழில்வாய்ப்பு, வாழ்வாதாரம், பொருளாதாரம் போன்றவற்றிற்கு பங்களிப்பு செய்கின்ற இத்துறையானது பாரம்பரியத்தையும், தேசிய மூலவளங்களையும், உள்நாட்டு தொழில்நுட்பத்தையும் கட்டிக்காக்கும் அரும் பணியை செய்துவருகின்றமை அளப்பரிய விடயமாகும். இலங்கையின் ஒன்பது மாகாணங் களில் நீர் வளமும், நில வளமும், மனித வளமும் ஒருங்கிணைந்த மாகாணமான கிழக்கு மாகாணத்தின் நிர்வாகத்தின் கீழ் கிழக்கே கடலாலும் மேற்கே மட்டு வாவியாலும் சூழ்ந்த அழகிய நகரமான மட்டுநகரில் அமைந்திருக்கிறது எமது மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழிற்துறை திணைக்கள மாவட்ட அலுவலகம்.

குடிசைக் கைத்தொழில் துறை சார்ந்தும், சிறுகைத்தொழில் துறை சார்ந்தும் படிப்படியாக வளர்ச்சியடைந்துவந்த மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி செயற்பாடுகள் யாவும் ஆரம்பகாலங்களில் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இருந்துவந்தது. 1987ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையின் ஊடாகவும் 2006ஆம் ஆண்டின் பின்னர் கிழக்கு மாகாண சபையின் ஊடாகவும் பலப்படுத்தப்பட்ட கிராமிய தொழிற்துறையானது தற்போது கிழக்குமாகாண கௌரவ முதலமைச்சர் அவர்களின் நேரடி அமைச்சின் கீழ் கிராமிய தொழிற்துறை திணைக்களம் என்ற கட்டமைப்பில் செயற்பட்டுவருகின்றது. திருகோணமலையில் இயங்கிவரும் மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் இயங்கிவருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட கிராமிய தொழில்துறை திணைக்கள அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் 29 நெசவு பயிற்சி நிலையங்களும், 12 தும்பு பயிற்சி நிலையங்களும், 03 தச்சு பயிற்சி நிலையங்களும், ஒரு மட்பாண்ட பயிற்சி நிலையமும் தற்போது இயங்கிவருவதுடன் 03 விற்பனை நிலையங்களும், ஒரு சுற்றுலா விடுதியும், ஒரு சாய நிலையமும், ஒரு வடிவமைப்பு நிலையமும், ஒன்றுகூடல் மண்டபம் ஒன்றும், ஒரு உற்பத்திக் களஞ்சிய நிலையமும் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக ஒரு சிறுகைத்தொழில் பேட்டையும் காணப்படுகின்றது.

இத் திணைக்களத்தில் 89 நிரந்தர அரச உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்பட்டு உள்ளனர். இவர்களது பணி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 45 கிராமிய தொழிற்துறை பயிற்சிநிலையங்களின் சேவைகளை வினைத்திற னுடனும், விளைதிறனுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது என்பதாகும். மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்று இருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் நோக்கத்தோடும் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடும் மேற்படி பயிற்சி நிலையங்கள் பயிற்சிகளை வழங்கி வருகின்றன என்பதுடன் இப்பயிற்சி நிலையங்களில் உற்பத்திசெய்யப்படும் உற்பத்திப்பொருட்கள் மாவட்டத்தின் மூன்று விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனைக்கும் காட்சிக்கும் வைக்கப்படுகின்றன.

எமது மாவட்டத்தில் நெசவு தொழிலின் மூலம் பெறப்படுகின்ற உற்பத்திகளுக்கு வெளி மாவட்டங்களில் சிறப்பான கேள்வியும் சந்தை வாய்ப்பும் காணப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திப் பொருட்களின் தரம், நேர்த்தி, சிறந்த தொழில் நுட்பம் மற்றும் தொடர்பாடல் என்பன இதற்கான காரணங்கள் ஆகும். உதாரணமாக, எமது மாவட்டத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு சராசரியாக நெசவு நிலையங்களுக்கு 290 கிலோகிராம் மூலப்பொருளான நூல் வழங்கப்பட்டு இரண்டு இலட்சத்திற்கும் அதிகமாக உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே போன்று மாதம் ஒன்றுக்கு சராசரியாக தும்பு நிலையங்களுக்கு 12 கிலோகிராம் மூலப்பொருளான தும்பு வழங்கப்பட்டு இருபத்தையாயிரத்திற்கும் அதிகமாக உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் எமது மாகாணத்தில் எமது மாவட்டத்திலேயே கூடுதலான உற்பத்திகளும், வருமானமும் எமது திணைக்களத்திற்குக் கிடைக்கின்றது.

எமது மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி, மட்டக்களப்பு, பாசிக்குடா ஆகிய மூன்று விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றின் மூலம் மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூபா.600,000.00 பெறுமதியான உற்பத்திப்பொருட்கள் விற்பனையாகின்றன. இவற்றைத் தவிர சுற்றுலாவிடுதி, ஒன்றுகூடல் மண்டபம், உற்பத்திக் களஞ்சிய நிலையம் என்பனவற்றின் ஊடாகவும் வருமானம் ஈட்டப்படுவதுண்டு.

மாவட்டத்தில் காணப்படுகின்ற வறுமை வீதத்தினை குறைக்கும் நோக்கத்தோடும், வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடும் எமது திணைக்களமானது இளைஞர், யுவதிகளுக்கான பயிற்சிகளையும் பின்னர் தொழில் வாய்ப்புக்களையும் வழங்கி தேசிய உற்பத்தியில் பங்காளர்களாகவும் சுயமாக பொருளாதாரத்தினை ஈட்டக் கூடியவர்களாகவும் அவர்களை வளர்ச்சியும், தேர்ச்சியும் அடையச்செய்யும் பணியை செவ்வனே செய்து வருகின்றது. எமது திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்டத்துக்குட்பட்ட பயிற்சி நிலையங்களில் இருந்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை பயிற்சியினை முடித்து சுமார் 250 பயிற்சியாளர்கள் வெளியேறுகின்றனர். இதனடிப்படையில் வருடந்தோறும் சுமார் 500 இற்கும் மேற்பட்ட பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

எமது மாவட்டத்தில் நெசவு தொழிற் துறையின் ஊடாக உற்பத்திப் பொருட்களாக சாறி, சாறம், பெட்சீட், துவாய், தலையணை உறை, மேசை விரிப்பு, சேவியற் போன்ற பல உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. தும்பு தொழிற் துறையின் ஊடாக தும்புத்தடி, ஈர்க்குத்தடி, கயிறு, கால்மிதி, சுவரலங்காரம் மற்றும் பிற அலங்காரப் பொருட்கள் போன்ற உற்பத்தி பொருட்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தச்சு தொழிற் துறையின் ஊடாக கதிரை, மேசை, தறி இயந்திர பாகங்கள், தும்பு இயந்திர பாகங்கள், மற்றும் சிறு அலங்காரப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை மட்பாண்ட தொழிற் துறையின் ஊடாக பானை, சட்டி, கூசா, பூச்சாடி மற்றும் அலங்கார களி உற்பத்திகளும் தயாரிக்கப்படுகின்றன.

இத்தொழிற்துறைசார் பயிற்சிநெறிகளை தேசியமட்ட தரத்திற்கு உயர்த்திச்செல்லும் நோக்கோடு தேசிய தொழில் தகைமை சான்றிதழை (NVQ) வழங்கி தேசிய தொழில் துறையில் எமது மாவட்ட இளைஞர், யுவதிகளை இணைக்கும் முன்னேற்பாடுகளையும் மட்டக்களப்பு மாவட்டம் முன்னின்று செயற்படுத்தி வருகின்றது. இதன் ஊடாக வேலைவாய்ப்பினை வழங்கி சிறந்ததோர் வாழ்வாதாரத்தினை ஏற்படுத்த முடியும் என்கின்ற உயர் நோக்கத்துடன் தொடர்ந்தும் எமது திணைக்களத்தின் ஒத்துழைப்புடனும், வழிகாட்டலுடனும் எமது மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் சிறப்பாக செயற்பட்டு சமூகத்துக்கு பாரிய பங்களிப்பினை வழங்கிக் கொண்டிருப்பதனை யாவரும் அறிய முடிகின்றது.

திருமதி.யுகந்தினி சுரேஸ்குமார்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கிராமிய தொழில்துறை திணைக்களம்,
மாவட்ட அலுவலகம்,
கல்லடி, மட்டக்களப்பு.

# கிராம அபிவிருத்தியில் கிராம/மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் வகிபாகம்



உலகமயமாக்கலின் விளைவாக உலகநாடுகள் பலவும் தத்தமது அபிவிருத்தியினை முதன்மை இலக்காகக் கொண்டு பல்வேறுபட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகின்றன. அந்தவகையில் இலங்கையும் தமது துறைசார் அபிவிருத்திகளுக் கான திட்டமுன்மொழிவுகளை உருவாக்கி அதனை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகின்றது. இத்திட்டங்களில் பெரும்பான் மையானவை கிராமமட்டங்களில் ஆரம்பிக்கப்படு கின்றன. கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியே நிலைபேறாக அமையும் என்பதே இதற்கான காரணமாகும். இவ்வாறான கிராம அபிவிருத்தியில் கிராம/மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மிகப்பெரும் பங்கினைவகிக்கின்றன.

கிராமங்களைப் பொறுத்தவரையில் அங்கு பல்வேறு சமூகமட்ட அமைப்புக்கள் செயற்படுகின்றன. உதாரணமாக விளையாட்டுக் கழகங்கள், மீனவச் சங்கங்கள், விவசாய சம்மேளங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் என்பவற்றைக் குறிப்பிட லாம். இச்சங்கங்கள் பெரும்பாலும் தங்களது விடயங்கள் தொடர்பான செயற்பாடுகளுடனேயே நின்றுவிடுகின்றன. எனினும் கிராம/மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் கிராம அபிவிருத்தியில் தொடர்புபடும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சுகாதார நடவடிக்கைகள், கல்வி, சூழல் பாதுகாப்பு, மகளீர் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி நடவடிக்கைள், கிராம விவசாயமும் அபிவிருத்தியும், விலங்கு வேளாண்மை, குடிசைக் கைத்தொழில், நுண்கடன் முயற்சிகள், சிரமதான நடவடிக்கைகள், அனர்த்த நிவாரண நடவடிக்கைகள், சமயபண்பாட்டு நடவடிக்கைகள், கலைகலாச்சார நடவடிக்கைகள், விளையாட்டு, பொழுதுபோக்கு, நல்லொழுக்கத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள், விசேடஉதவி தேவைப்படுவோருக்கான திட்டம் என தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளன

கிராமமட்ட அபிவிருத்தி திட்டங்களை திட்டமிடும் போது கிராம/மாதர் கிராம அபிவிருத்திசங்கங்களின் வகிபாகம் மிகவும் பிரதானமாக ஏற்றுக்கொள்ளப்படு கின்றது. கிராமத்தில் சகல மக்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல பிரிவினரையும் உள்ளடக் கியதான நடுநிலையான சங்கமாக செயற்படுவதன் காரணமாக அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் பொரும்பாலும் அச்சங்கங்களுடன் இணைந்தே தமது வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்து கின்றன. மேலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போது மக்களின் பங்களிப்பினை பெற்றுக்கொள்வ தற்கும் அவை தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்கும் இச்சங்கங்கள்

மிகப்பெரும் பங்கினைவகிக்கின்றது. சமூகமட்டத்தில் காணப்படும் முரண்பாடுகளை களைந்து ஐக்கியத்தை உருவாக்கல் கிராமமட்ட பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவற்றினை தொடர்புடைய அதிகாரிகளுக்கு தெரிவித்து தீர்வினை பெற்றுக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளில் முன்நின்று செயற்படுகின்றன.

ஐக்கியநாடுகள் சபையினால் நிறைவேற்றப்பட்ட பத்தாயிரம் அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றான பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தலும் பெண்களை வலுவூட்டுதலும் என்பதற்கிணங்க கிராமமட்டத்தில் பால்நிலை சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் மாதர் கிராம அபிவிருத்திசங்கங்கள் செயற்படுகின்றன. பெண்களின் ஆளுமைவிருத்தி, சமூகசெயற்பாடுகளின் பங்குபற்றல்கள் என்பனவற்றை ஊக்குவிப்பதுடன் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில் விசேடகவனம் செலுத்தி அவர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தல், சுழல்கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற செயற்திட்டங்களின் ஊடாக சமூகத்தின் பெண்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன. இவ்விடயங்கள் கிராமமட்டத்தில் குடும்பங்களின் அபிவிருத்திக்கு வழிவகுப்பதுடன் சிறுவர் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகின்றது.

கிராம/மாதர் கிராம அபிவிருத்திசங்கங்கள் கிராமமட்ட ஆளுமைகளை அடையாளங்கண்டு அவர்களின் எதிர்கால தலைமைத்துவத்திற்கான ஆரம்பபடிக்கல்லாக அமைகின்றன. ஜனநாயக உரிமையுடன் குறித்த கிராம பொதுமக்களின் ஏகமனதான ஆதரவுடனும் இச்சங்க நிர்வாகசபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இத்தெரிவுகளுக்கு அடிப்படையாக அமைவது குறித்தநபர்களின் ஆளுமையும், சமூகம் நோக்கிய சிந்தனையுமாகும். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் தலைமைத்துவம் அரச/அரசசார்பற்ற அமைப்புகளால் நடாத்தப்படும் வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் மேம்படுத்தப்படுகின்றன. மேலும் தமது பதவிக் காலத்தில் மக்களுடன் நெருங்கிச் செயற்படும் இவர்கள் தாம் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் மூலம் தம்மை செம்மைபடுத்திகொள்கின்றனர். கிராம/மாதர் கிராம அபிவிருத்திசங்கங்களில் பதவிவகித்தவர்கள் பிரதேச சபை உறுப்பினர்களாகவும், மாகாண சபை உறுப்பினர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் உள்ளமை இதற்கு சான்றாகும்.

கிழக்குமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட 1178 கிராம அபிவிருத்தி சங்சங்களும் 873 மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களும் செயற்படுகின்றன. இச்சங்கங்களின் நிர்வாகசெயற்பாடுகள் குறித்தபிரிவு பிரதேசசெயலாளரின் வழிகாட்டலில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் நேரடியாகக் கண்காணிக்கப்படுவதுடன் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம் மற்றும் திணைக்களம் ஊடாகவும் மேற்பார்வை செய்யப்படுகின்றது. இவ்வாறான இறுக்கமான நிர்வாக அமைப்பானது கிராம/மாதர் அபிவிருத்தி சங்கங்களின் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதுடன் அவற்றின் நம்பகத்தன்மை வலுப்படுத்துகின்றன. இதன்மூலம் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்களை உயர் வினைத்திறனுடன் மேற்கொள்ளமுடிகின்றது.

அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதார விருத்தியில் மாத்திரமே தங்கியிருப்பதில்லை. ஒரு சமூகத்தின் சகலதுறைகளிலும் ஏற்படும் சாத்தியமான மாற்றத்தின் ஊடாகவே நிலையான அபிவிருத்தி உருவாகின்றது. இதற்கான அடித்தளம் சமூகத்தின் அடிமட்டத்தில் இடப்படவேண்டும். இதனை நேரடியாக நடைமுறைப்படுத்த முயல்கையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே இச்செயற்திட்டங்களை சமூகத்தின் அங்கமாக விளங்கும் கிராம/மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தும் போது மக்களின் உயர்வான பங்குபற்றலும், பங்களிப்பும் கிடைக்கின்றது. இதன் மூலம் மக்களின் மனநிலையில் ஏற்படும் மாற்றம் கிராமங்களிற்கும் நாட்டிற்கும் அவசியமாகத் தேவைப்படும் அபிவிருத்தி இலக்குகளை இலகுவாக எய்துவதற்கு வழிகோலாக அமைகின்றது.

ஆக்கம் : ஞா. ஜெயகாந்
கிராமஅபிவிருத்திஉத்தியோகத்தர்
வெருகல்

# Empowerment Of Coastal Rural Life Through Seaweed Farming

S. Nishanthi and N.K.K. Brintha
Department of Crop Science, Faculty of Agriculture, Eastern University, Sri Lanka

## 1. Importance of Seaweeds

Seaweed makes a reliable role on human life. It is a versatile product that can be used for direct human consumption or processed into food additives, fertilizers, pet food, feeds, biofuel, cosmetics, and medicines (McHugh, 2002). Seaweed, apart from being a food, is an important source of colloids or gels such as agar, and medically important elements such as iodine. Many Sri Lankan confectionery manufacturers are interested in obtaining a local supply of carrageenan (polysaccharide gel), so the demand for cultivated seaweed is expected to rise. Global production of seaweed increased from less than four million wet tonnes in 1980 to almost twenty million wet tonnes in 2010 (Krishnan and Narayanakumar, 2013).

## 2. Cultivation Methods

There are several cultivation methods, such as off-bottom, rafts, and long-lines.

### a) Off-bottom method

Initially a wooden stakes or mangrove stakes or any other bush timber which does not rot easily in sea water are driven into the bottom 20 to 25 cm apart from each other in straight rows. Dimension of stick should have 5 to 10 cm in diameter and 1 to 1.5 m in length. At least 0.5 m of the stake should be driven into the sand to make them secure. Thick polypropylene rope of 5 m long with 30 raffias is firmly stretched between two stakes. The planting materials are tied to the raffia strings. The rope should be placed 20 to 30 cm from the sea bottom to avoid the growing seaweed from being tossed on the sand and 20 to 30 cm below the water surface at low tide to prevent the seaweeds from being exposed to direct sun light. Direct sun light will kill the exposed parts.





Fig.1. Off-bottom method

b) **Raft or Floating Method**

In this method instead of rope, seaweed is attached to some device that keeps the seaweed floating; rising and falling, with the tidal changes. The thing is, here seaweed should be keep about 50 cm below the water surface. The floating material can be a simple frame made of bamboos, mangrove wood, or bush timber long-lasting in seawater and inside the frame 3 mm rope can be used to stretching the lines. Here the planting materials are tied in the lines of the frame. Each line will carry 15 pieces of seaweed tied to the 3 mm rope with raffia. Then anchor the frame to the sea bottom and this should be attached with extra bamboos or floaters to avoid the frame from sinking.




Fig.2. Raft or Floating Method

c) **Long-line Method**

The long-line method is similar to the raft or floating method in many aspects. Here, seaweed is hung to a rope which is suspended by floaters. In this method, however, the main rope is thicker; about 10 to 15 mm in diameter. This rope is tied to plastic floaters or bamboo set at 4 to 5 meters interval and anchored at each end. The pieces of raffia should be holding the seaweed. The important thing is, it should be hung near the water surface to receive sufficient sunlight. For that the rope should be keep 0.5 m below the sea level.




Fig.3. Long line method

## 3. Scope of Seaweed Farming in Empowerment of costal Rural Life

Many emerging opportunities that can aid hasten the renovation of agricultural activities into sustainable businesses take account of improving the performance of the agricultural value chains, digitalization of agricultural production and marketing information, specialization into the activities on the value chain, innovative financial packages, investment into irrigation and value addition. But when consider both small scale and large scale farmers, there should be the possible and viable option should be encountered with the increment of production. Among all other possibilities, Sea weed farming is the viable option in these areas because of the cited evidences indicates its profitability and marketability to become the induce factor in crop cultivation with low budget and become a motives in the industry.

According to the evidences obtained related with Sea weed farming, there are Positive socio-economic impact of seaweed farming prevailed in coastal communities. Because of the farming model favors small-scale family operations over plantation style farms. Seaweed farming generates substantial employment relative to other forms of aquaculture. In addition, seaweed farming can be undertaken in remote many of these communities have traditionally been reliant on coastal fisheries and are currently being affected by overexploitation of these resources and areas where coastal communities face a reduced number of economic alternatives. In these cases, the impact of seaweed farming goes beyond its economic benefits to communities as it reduces the incentives for overfishing.

Further evidences are encountered how the economic fortunes of many villages have been transformed by seaweed farming. In this scenario, seaweed farming is considered as a potential element for empowering coastal rural life. This area has the potential to satisfy the ecological requirements necessity for the seaweed farming with minimal effort. This is relatively simple farming techniques, low requirements of capital and material inputs, and short production cycles.

So absolute coverage on seaweed farming prevails at coastal areas as a wonderful opportunity to increase the employment opportunity and decrease the poverty of areas meanwhile forms a alternatives and viable income source to continue the better accessibility on Agricultural production as year round basis for maintaining of sustainable production path in Agriculture through sea weed farming.

## References



FAO corporate document repository. Handbook on *Eucheuma* seaweed cultivation in Fiji, http://www.fao.org/docrep/field/003/ac287e/ac287e02.htm. Accessed on 1st November 2015.

Krishnan, M. and Narayanakumar, R. (2013). Social and economic dimensions of carrageenan seaweed farming. FAO Fisheries and Aquaculture Technical Paper, (580), 163-184.

McHugh, D. J. (2002). Prospects for seaweed production in developing countries. FAO Fisheries Technical Circular. No. 968. Rome, FAO. Pp 28.

# ஆடை உற்பத்தியில் இயற்கைச்சாயம் – ஓர் கண்ணோட்டம்

# ( The View Of Natural Dye for the Cloth Production)



இன்று உலகில் ஆறறிவுபடைத்த ஜந்துக்களாக வாழ்பவர்களின் வரலாறு சுமார் இரண்டரை மில்லியன் ஆண்டுகளைக் கடந்துநிற்கின்றது. அத்தகைய மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறையுள் என்று காணப்பட்டாலும் ஆரம்பகாலங்களில் முதலிடம் உணவிற்கு வழங்கப்பட்டு அதன்பின் உறையுளிற்கு கொடுக்கப்பட்டு இறுதியாகவே உடை என்றதேவை தோற்றம் பெற்றது. மனித தோற்றத்தின் ஆரம்பகாலங்களில் இயற்கையிலான இலை, குழைகளுடன் உடை என்ற அடிப்படைத் தேவை பூர்த்தியாக்கப்பட்டது. காலங்கள் கடந்திட நாகரீகம் தலைதூக்கி கலாசாரம் மேலோங்கி செயற்கை தயாரிப்பிலான ஆடைகள் மனிதனின் தேவையைப் பூர்த்திசெய்தது. ஆனால் இன்றுமீண்டும் செயற்கை புறந்தள்ளப்பட்டு இயற்கைக்கு முன்னுரிமையளிக்கும் செயற்றிட்டங்கள் நடந்தேறிவருகின்றது.

ஆரம்பகால ஆடைகள் இயற்கை இழைகளிலே தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு புராண இதிகாசங்கள் சான்று பகர்கின்றன. இராமாயணத்தில் சீதையை இராவணன் அசோகவனத்தில் மறைத்து வைத்திருந்தபோது சீதைக்கு மாற்றுஉடை தேவைப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் வாழை நாரில் இழையெடுத்து ஆடை நெய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எந்தவொரு தொழில்நுட்பவசதியும் இல்லாத அக்காலத்திலேயே இயற்கை இழைகளில் ஆடைகள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது இயற்கையுடன் ஒன்றியதொரு வாழ்வாகவே மனிதனின் வாழ்நாட்கள் இருந்துள்ளமையை எமக்கு உணர்த்துகின்றது.

மேலும் வெறுமனே வாழைநாரிலிருந்து மட்டும் இழைகள் எடுக்கப்படவில்லை. சணல், கற்றாழை, மூங்கில், அன்னாசி இலை ஆகியவற்றின் இழைகளிலிருந்தும் ஆடைத்தயாரிப்பு இன்றைய நாட்களில் நடைபெறுவதாக அறியமுடிகின்றது. அத்துடன் தேங்காய்நார், எருக்கஞ்செடி, வெட்டிவேர் என மூலிகைகளின் நார்களைக் கொண்டும் துணிகள் வடிவமைக்கப்படுகின்றன.

இவ்வாறாக மேலே கூறப்படும் இழைகள் வெறுமனே இயற்கை நிறங்களுடன் உற்பத்திக்கு பயன்படுவதில்லை. அவற்றிற்கு சாயம் ஏற்றப்பட்டு வண்ணமாக்கப்பட்ட பின்னரே ஆடை உற்பத்தியில் பங்குகொள்கின்றன. இழைகள் சாயமேற்றப்படுகின்றபொழுது அவை புதுப் பொலிவினையும் அழகினையும் பெறுகின்றன.

சாயமேற்றல் என்பது இயற்கை, செயற்கை என்ற இருமுறையிலும் செய்யப்படும் செயற்பாடாகும். சித்தர்களும், முனிவர்களும் துணிகளுக்கு

சாயமிடுவது போன்ற காட்சியிலான வரைபடங்கள் நூதன சாலைகளில் இன்றும் காணப்படுகின்றன. இவ்வரைபடங்களிலிருந்து ஆரம்பகாலங்களில் இழைகளுக்கு இயற்கை முறை சாயமேற்றலே நடைபெற்றிருக்க வேண்டும் என்ற அனுமானத்திற்கு வரவேண்டிய தாக உள்ளது. காயப்போடப்பட் டிருந்த வெள்ளை நூலில் நாவற்பழம் விழுந்தபோது ஏற்பட்டகறை இயற்கைச் சாயம் பற்றிய அறிவைத் தூண்டியதாக ஆரம்பகால சாயவல்லுனர் ஒருவரின் வரலாற்றிலிருந்து அறியமுடிகின்றது.

ஒருகாலத்தில் பருத்தி, பட்டு உள்ளிட்ட நூல்களில் இயற்கை சாயமேற்றப்பட்ட ஆடைகளே தயாரிக்கப்பட்டுவந்தன. இவ்வாறு தயாரிக்கப்பட்டு வந்தகாலத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய வண்ணத்திலான ஆடை வகைகளே தயாரிக்கப்பட்டன. இது இயற்கையைப் பாதிக்காத வண்ணமும் இருந்தது. காலமாற்றத்திற்கேற்ப வாடிக்கையாளர்களின் பலதரப்பட்ட ரசனைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் பலவகையான வண்ணங்களில் ஆடைகளை தயாரிக்கவேண்டிய கட்டாயம் ஆடை உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து பலவகையான இரசாயனங் களைக் கொண்டு செயற்கை முறையில் பலவண்ணங்களில் சாயங்கள் தயாரிக்கப்பட வேண்டிய சூழ்நிலைஏற்பட்டது.

ஆனால் இன்று ஆடைவடிவமைப்பு, ஆடை உற்பத்தியுடன் தொடர்புடைய ஒருசாராரின் பார்வை மீண்டும் ஆரம்பகாலங்களின் இயற்கைச் சாயத்தையே நாடுகின்றது. இயற்கைச் சாயத்தை உருவாக்கும் கலை என்பது ஒருகுட்டி நாகரீகத்தையே உருவாக்குவதற்கு ஒப்பானது. இயற்கைச் சாயத் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் தம்விரல் நுனியில் அறிவைக் கொண்டவர்களாக காணப்படவேண்டும். இயற்கைச் சாயக்கலவை யின் வெப்பநிலை கலவையாளர்களின் கையினா லும் சாயத்தின் Ph மதிப்பு நுகர்ந்து பார்ப்பதினா லும் உறுதிப்படுத்திக் கூறக்கூடியவர்களாக சாய உற்பத்தியாளர்கள் காணப்படவேண்டும். இயற்கைச் சாயத் தயாரிப்பைப் பொறுத்தவரை யில் பொருத்தமான அளவான தட்பவெப்பநிலை அவசியமாகின்றது. இயற்கைமுறையில் சாயம் தயாரிப்பது என்பது மிகவும் கடினமான தயாரிப்புத் துறையாகும்.

**இயற்கைச் சாயஉற்பத்தியும் இழைகளில் அவற்றை சேர்ப்பதற்குரிய படிமுறையும்.**

- ❖ தேவைப்படும் வர்ணத்திற்குரிய இயற்கை மூலப்பொருட்களை தெரிவுசெய்தல்.
- ❖ தெரிவுசெய்யப்பட்ட மூலப்பொருட்களை சிறுதுண்டுகளாக வெட்டிக் கொள்ளல்.
- ❖ மூலப்பொருட்களை சூடேற்றுவதற்கு பொருத்தமான பாத்திரத்தில் அவற்றினை இட்டுக்கொள்ளல்
- ❖ குறித்த சாயம் அல்லது வர்ணம் அக்கலவையில் தோன்றும் வரை கொதிக்கவைத்தல்
- ❖ கொதிக்கவைத்த கலவையை வேறு ஒருபாத்திரத்திற்குள் வடித்தல்.
- ❖ குறித்த வர்ணத்தினை பெறுவதற்கு மேலதிகபொருட்களை கலவையில் கலத்தல்.

  உதாரணம்: உப்பு, வினாகிரி
- ❖ கலக்கப்பட்ட கலவையை மீண்டும் சூடேற்றி அவித்தல்
- ❖ சூடேற்றப்பட்டு சாயம் பெறப்பட்ட பாத்திரத்தினுள் நூலினை இட்டு உரியவர்ணம் வரும் வரைஅவித்தல்
- ❖ கையுறையைப் பயன்படுத்தி இழையை நன்றாக பிளிதல்
- ❖ பிளியப்பட்ட இழையினை நன்றாக உலரவைத்து பாவனைக்கு உட்படுத்தல்

இவ்வாறாக இயற்கை மூலப்பொருட்களைக் கொண்டு பெறப்படும் இயற்கைச் சாயத்துடன் மரங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பிசினைச் சேர்த்துக் கொள்ளும் போது ஒட்டும் தன்மைபெறப்படுகின்றது. இவை பெரும்பாலும் பட்டுநூல்களுக்கு போடப்பட்டு பட்டுநூலிலான ஆடை உற்பத்திகள் மெருகேற்றப்படுகின்றன. இருப்பினும் இயற்கைச் சாயங்களில் இருந்து மெல்லியநிறம் மட்டுமே பெறமுடியும். அடர்நிறங்கள் பெறுவது என்பது சற்றும் சிரமமானதே.

### இயற்கைச் சாயப்பயன்பாட்டின் அனுகூலங்கள்

### Advantages for the use of Natural Dye

- இயற்கைசாயங்கள் சூழலுடன் நட்புறவைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.
- புற்றுநோய்க் கிருமிகளில் இருந்து விடுவிப்புவழங்கக் கூடியவை
- இயற்கைச் சாயமேற்றப்பட்ட ஆடைகள் மூலமாக கிடைக்கப்பெறும் வருமானம் அதிகம்
- இயற்கைசாய மூலம் ஒன்றிலிருந்து ஐந்து தொடக்கம் பதினைந்து வண்ணங்கள் வரை பெற்றுக் கொள்ளமுடியும்
- இயற்கைச் சாயங்கள் பெறப்படும் மூலப்பொருட்களின் கழிவுகள் விவசாயத்திற்கு தேவையான உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தரிசு நிலங்களாகக் காணப்பட்ட வேளாண்மை நிலங்கள் இக்கழிவுகள் மூலமாக அதிகரித்த விளைச்சல் வழங்கும் நிலங்களாகின்றன.
- இயற்கைச் சாயநிறங்கள் உயர் பன்முகத்தன்மை கொண்டவை.
- இயற்கைச் சாயவர்ணங்கள் மங்காத நீண்ட ஆயுள் கொண்டவை.



கைநெசவு, இயற்கைச் சாயம் போன்றவை உடலுக்குகெடுதல் விளைவிக்காதவை என்று நாம் பழமையைப் புறந்தள்ளி புதுப்புது தொழில்நுட்பங்களை நாடிய கணத்திலிருந்து இந்த பூமிப்பந்திற்கு தீங்கிழைக்க ஆரம்பித்து விட்டோம். இயற்கைச் சாய உற்பத்திகள் வேகமற்றவை மற்றும் செலவினங்கள் கூடியவை யாகக் காணப்பட்டாலும் மிகவும் பாதுகாப்பினை மனிதனுக்கு வழங்குபவை என்பது உறுதிபடக் கூடியஉண்மை. செயற்கைச் சாய உற்பத்திகள் சில நிமிடங்களில் நடந்துமுடிந்து விடுகின்றன. ஆனால் அவை ஏற்படுத்தும் விளைவுகளும் விபரீதங்களும் அதிகம். தோல் ஒவ்வாமைகளை மனிதனுக்கு ஏற்படுத்துவதுடன் சூழல் சீர்கேட்டையும் பாதித்துள்ளது. மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

### இயற்கைச் சாயஉற்பத்தியில் எதிர்நோக்கப்படும் சவால்கள்

### The Challenges for Production of Natural Dyes


- வினைத்திறமையான ஊழியர்கள் தேவைப்பாடு அதிகம்.
- மூலப் பொருட்களை சேகரிப்பது கடினம். அவை அதிகப்படியான செலவுடயவை.
- மூலப் பொருட்களை துல்லியமாக சாயநுட்ப ங்கள் கொண்டு பிரித்தெடுப்பதற்கான தொழில்நுட்பஅறிவு கிடைப்பது குறைவு.

❖ பிரித்தெடுக்கப்படும் நிறங்கள் இழைகளில் சேர்ப்பதற்கு முன்பதாக சிலசந்தர்ப்பங்களில் சூரியக்கதிர், ஊழியர் வியர்வை மற்றும் காற்று போன்றவற்றின் மூலம் நிறம் மாறக்கூடும்.

❖ செயற்கைசாயங்கள் ஆய்வு கூடங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதற்கு உரியகாலம் தேவைப்படுவது போல இயற்கைச் சாயங்களுக்கான தாவரங்கள் வளர்வதும் பருவங்கள் சார்ந்துள்ளன.


❖ ஆடை உற்பத்தியில் இயற்கைச் சாயங்களின் பயன்பாட்டை பொறுத்தவரையில் உள்ளூரில் அவற்றின் கேள்வியும் விருப்பத் தேர்வும் குறைந்தமட்டத்திலேயே காணப்படுகின்றது. ஆனால் வெளிநாட்டவர்கள் ஆடைத்தெரிவில் இயற்கைச் சாயங்களால் உற்பத்திசெய்யப்படும் உற்பத்திகளையே அதிகம் நாடுகின்றனர். இச்செயற்பாடு சுற்றுலாப்பயனிகளின் வருகையை நாட்டிற்கு அதிகரித்துள்ளதுடன் இதன்மூலமாக வருவாய் ஈட்டுவதற்கும் வழிகோலியுள்ளது எனலாம்.

இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் எமது சந்தியினருக்கு பரிசளிக்கவேண்டிய சூழலை செயற்கை செய்முறைகளால் செயலிழக்க விடமால் ஆரம்பகாலந்தொட்டு வாழ்விற்கு தேவையான நன்மைகளை மட்டுமே வழங்கும் இயற்கை செய்முறைகளால் பாதுகாப்பது நம் அனைவரதும் கடமையாகின்றது. அந்தவகையில் ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் அங்கமாகத் திகழும் ஆடைகளை இயற்கை தயாரிப்பு மூலமான வடிவமைப்புக்களை நாடுவதன் மூலமாக அவரவர் தம்மை பாதுகாத்துக் கொள்வதுடன் இவ்வாறான உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவிசெய்யமுடியும் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையாகின்றது.



அபிராமி சிவகடாட்சம்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கிராமிய தொழிற்துறைத் திணைக்களம்
திருகோணமலை.

# தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து கிராமிய தொழிற்துறை திணைக்களம்வரை ஒரு வரலாற்றுப் பார்வை.



1989ஆம் ஆண்டில் சனநாயக குடியரசினால் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையின் கீழ் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாக்கப் பட்டது. அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபை பிரதம முதலமைச்சர் (திரு.வரதராஜப் பெருமாள்) அவர்களின் ஆலோசனையின் கீழ் செயலாளர் திரு. ஸ்ரீசண்முகராஜா அவர்களின் வழிகாட்டலின் படி வடக்கு கிழக்கு மாகாணத்தி லுள்ள வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்கும் முகமாக வடக்கு கிழக்கு மாகாணத்திற்கென தனியான தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று 1989.09.29ஆம் திகதியன்று வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பயிற்சி நெறியினை வழங்குவதற்கு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் பலகோடி ரூபா பெறுமதியான பயிற்சி இயந்திரங்கள், உற்பத்தி துறைசார் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ் இயந்திரங்களை வைத்து கிராமிய தொழிற்துறை பயிற்சி நிலையம் மின்னியல் பயிற்சி, கடைச்சல் இயந்திர பயிற்சி, வாகனம் பழுது பார்த்தல் பயிற்சி நெறி, மேசன், தச்சு, ஒட்டுவேலை போன்ற பயிற்சி நெறிகளை உடன் ஆரம்பித்து ஒவ்வொரு பயிற்சி நெறியிலும் 20 பேர் விகிதம் வருடம் ஒன்றிற்கு 150 தொடக்கம் 200 வரையான பயிலுனர்களை பயிற்றுவித்து வந்தது.

1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சிறிது காலம் இயக்கமின்றி இருந்தாலும் 1992ஆம் ஆண்டில் மீளவும் நிலையம் புனரமைக்கப்பட்டு தனது பயிற்சி நெறியை முன்னெடுத்து சென்றது. அக்கால கட்டத்தில் கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் திரு.செனவிரத்ன அவர்களின் ஆலோசனையின் படி முற்பண கணக்கு நடவடிக்கையின் கீழ் கிழக்கு மாகாண காரியாலயம், பாடசாலைகள், உற்பத்திச்சாலைகளுக்கு தேவையான தளபாடங்களை உற்பத்தி செய்து விநியோகிப்ப தற்கான தனியான உற்பத்தி அலகு ஒன்று உருவாக்கப்பட்டு இங்கு வருடாந்தம் 20 தொடக்கம் 25 மில்லியன் பெறுமதியான உற்பத்தி பொருட்கள் தயாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் தொடக்கம் அம்பாறை வரையான அரச திணைக்களம் மற்றும் பாடசாலை என்பனவற்றிக்கு அவர்களின் தேவைக்கேற்ப விநியோகித்து வந்தது. இதில் மிகவும் முக்கியமாக பாடசாலைக்கான தளபாடம் மற்றும் தொழிற்துறைத் திணைக்களத்திற்கு தேவையான கைத்தறி மற்றும் உபகரணங்கள் தயாரித்தமை குறிப்பிடத்தக்கது.

கௌரவ ஆளுனர் அவர்களின் முயற்சியினால் தற்போது நிலையம் உள்ள 5.8 ஏக்கர் விஸ்தீரனமுள்ள தனியார் காணி அரச சொத்துக்கள் மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கமைவாக ரூபா 100 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. இதுவே தற்போதைய தொழிற்துறைத் திணைக்களத்தின் நிலையான சொத்தாக உள்ளது.அதைத் தொடர்ந்து 1994 தொடக்கம் 1997 வரையான காலப்பகுதியில் உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரனையுடன் வாகனம் பழுது பார்க்கும் பிரிவிற்கு பெரும் தொகையான இயந்திர உபகரணங்கள் பெறப்பட்டு மாகாண

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தி வருடாந்தம் 40 x 4 = 160 பேர் கொண்ட வர்களை மெக்கானிக்காக வெளியேற்றுவதற்கு உறுதுணையாக இருந்தது. அத்துடன் தொழிற் பயிற்சியினை மேற்கொள்வதற்காக வெளிமாவட் டங்களிலிருந்தும் வரும் மாணவர்களுக்கு தங்கி யிருந்து படிப்பதற்காக விடுதி மற்றும் உணவகம் ஒன்றை புதிதாக கட்டிடம் அமைத்து தந்ததுடன் அதற்கான தளபாட வசதிகளையும் வழங்கி தொழிற்துறை திணைக்களம் தொழிற்துறை பயிற்சி நிலையத்திற்கு வலுச் சேர்த்தது.

அதே வேளை உற்பத்தி பிரிவும் தனது உற்பத்தி நடவடிக்கையினை மேற்கொண்டு வந்தது. இந்நிலையில் 1994ஆம் ஆண்டளவில் 32 பேராக இருந்த உற்பத்தித்துறை ஊழியர்களின் எண்ணிக்கை 1995ஆம் ஆண்டு தொடக்கம் வளர்ச்சியடைந்து 1998ஆம் ஆண்டளவில் 200 பேர் வரை கடமை புரியும் ஒரு ஸ்தாபனமாக மாற்றமடைந்து காணப்பட்டது. இப்பிரிவிற்கு தனியான காரியாலயம், வாகனங்கள், சொத்துக்கள் என்பன பெறப்பட்டு நிறுவனமாக செயற்பட்டு வந்தது.

இப்பிரிவு தனது உற்பத்தி நடவடிக்கைகளை விட ஒரு படி மேல் சென்று பாடசாலைகளில் உள்ள தளபாடங்களை திருத்தி மீளவும் பாவனைக்குட் படுத்தக்கூடியவாறு வழங்கும் நோக்குடன் ஊழியர்களுக்கான நடமாடும் சேவை மூலம் கிழக்குமாகாணத்திலுள்ள 03 மாவட்டங்களுக்கும் சென்று திருத்த வேலைகளை மேற்கொண்டு வந்தார்கள். இதன்மூலம் கல்வி அமைச்சிற்கு பெருந்தொகையான பணம் சேமிப்பாக இடம்பெற்றது.

இவ்வாறான நடவடிக்கைகள் 2002ம் வருடம் வரை நடைபெற்று வந்தது. இதனைத்தொடர்ந்து கௌரவ ஆளுனர் அவர்களின் ஆலோ சனைக்கமைவாக உற்பத்தி பிரிவு நடவடிக் கைகள் முடிவுறுத்தப்பட்டு கடமையாற்றிய ஊழியர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள வெற்றிடங்களுக்கு உள்வாங்கப்பட்டு நிரந்தர நியமனம் அவர்களின் தகுதிக்கேற்ப வழங்கப் பட்டது.

2003ம் ஆண்டளவில் அப்போதைய கௌரவ ஆளுனர் அவர்களின் வழிகாட்டலின் படி சுயதொழில் பயிற்சி பிரிவை விஸ்தரிக்கும் முகமாக SEDES என்னும் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சுயதொழில் செய்வோருக்கு நுண்கடன் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2004ம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் கரையோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டதனால் அக்காலங்களில் ஏற்பட்ட தொழிலாளர்களின் பற்றாக்குறை சந்தையில் ஏற்பட்ட மனிதவலு பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக ILO, CCF, LEADS போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக 2005 -2008 வரையான காலப்பகுதியில் கீழ்வரும் தொழில்பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார பயிற்சிகள் வழங்கப்பட்டுவந்தன.


1. கணனிப்பயிற்சி
2. கணனி பழுது பார்த்தல்
3. தையல்
4. உணவு பதனிடல்
5. வெதுப்பக உற்பத்தி பொருட்கள்
6. மோட்டார் சைக்கிள் திருத்துதல்
7. துவிச்சக்கர வண்டி திருத்துதல்
8. சாறி பெயின்டிங் போன்ற பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டன.

NECDEP நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2011ம் ஆண்டு தொழிற்பயிற்சியை மேற்கொள்வதற்காக வகுப்பறைகள் விரிவுரை மண்டபங்கள் காரியாலயங்கள் அடங்கிய கட்டிடத்தொகுதிக்கென்று 9 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது. திணைக்களத்தின் மூலதன ஒதுக்கீட்டின் கீழ் 2011-2012 காலப்பகுதியில் தொழிற்துறைத்திணைக்களத்திற்கென இரு மாடி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 2012ம் வருடம் கிழக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி தொழிற்துறை அமைச்சின் அமைச்சர் கௌரவ துரையப்பா நவரட்ணராஜா அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

தொழிற்துறைத்திணைக்களம் தனது 03 மாவட்டங்களிலும் தனது நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துவதற்காக 2000ம் ஆண்டு தொடக்கம் மாவட்ட காரியாலயத்தை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பித்து திருகோணமலை மாவட்டத்தில் தலைமைக்காரியாலயத்துடன் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது. ஆயினும் 2009ம் ஆண்டளவில் திருகோணமலை மாவட்டத்திற்கு தனியான மாவட்ட காரியாலயம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்பித்து வைத்த காலத்தில் ஆளணிப்பற்றாக்குறை காணப்பட்டா லும் தற்போது சிறப்பான முறையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவை தொடர்பாக இனி விரிவாக நோக்குவோம்.

தற்போது காரியாலய நிர்வாக கட்டமைப்பின் கீழ் கிராமிய தொழிற்துறைத் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட அலுவலகம் இயங்கி வருகின்றது. இக்காரியாலயத்தில் உதவிப் பணிப்பாளர் திரு.N.M.நௌபீஸ் அவர்களின் தலைமையில் 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 21 நெசவுப்போதனாசிரியர்கள் மற்றும் 01 அலுவலகப்பணியாளர், 01 சாரதி, 10 திணைக்க ளத் தொழிலாளர்கள், 01 காவலாளி மற்றும் 05 பருவகாலத்தொழிலாளர்கள் பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்ட அலுவலகத்தின் கீழ் 11 நெசவு நிலையங்களும், 02 தும்பு நிலையங்களும், 04 விற்பனை நிலையங்களும், 07 ஏனைய நிலையங்களும் காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட நிலையங்களில் தும்பு மற்றும் நெசவுநிலையங்களில் 06 மாதத்திற்கு ஒரு தடவை பயிற்சியாளர்கள் உள்வாங்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இதனை விட பயிற்சியளிக்கப்பட்ட பயிற்சி யாளர்கள் தொழிலா ளர்களாக பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது. பயிற்சியாளர்களும் தொழிலா ளர்களும் இணைந்து இந்நிலையங்களில் உற்பத்தி நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை விட VTC Lathe, Auto Mobile நிலையங்களுக்குரிய பயிற்சிகள் 1



வருடமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிலையங்களில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் தொழில் வாய்ப்புக்களைப்பெற்று கை நிறைய சம்பாதிப் பது கண்கூடாகும். இவ்வாறான சிறப்பான பயிற்சிகளை திணைக்களம் வழங்கி வருவது எமக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.

பயிற்சியாளர்களின் நன்மை கருதி தற்போது பல புதிய பயிற்சி நெறிகள் எமது திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் வாழை நாரினைக் கொண்டு உற்பத்திப்பொருட்களை உருவாக்கல் மற்றும் தேங்காயெண்ணெய் தயாரித்தல், வெதுப்பகம் போன்றவை குறிப்பிடத் தக்கதாகும். இவற்றை விட சீதனவெளி எனும் இடத்திலும் ஆடைத்தொழிற்சாலையொன்றை அமைத்து மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையையும் எமது திணைக்களம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக திருகோணமலை மாவட்ட அலுவ லகம் தனது தொடர்ச்சியான நடவடிக்கையினை மேற்கொண்டு இனி வரும் காலங்களில் எமது திணைக்களத்திற்கு பெருமை சேர்க்கும் அபிவிருத்தி நடவடிக்கையினை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**எஸ். கீர்த்தனா**
அபிவிருத்தி உத்தியோகஸ்தர்
கிராமிய தொழிற்துறைத் திணைக்களம்
திருகோணமலை.

# Strategies for Effective Industrial Marketing



**The industrial marketing is a primarily B 2 B sale which means business to business. The industrial market is the set of all individuals and organizationsthat acquire goods and services that enter into the productionof other products or services that are sold, rented, or suppliedto others. The major types of industries making up theindustrial market are agriculture, forestry, andfisheries; mining; manufacturing; construction and transportation, communication and public utilities; banking, finance, andinsurance; and services.**

**The industrial market is composed of commercial enterprises, governmental organizations, and institutions whose purchasingdecisions vary with the type of industrial good or serviceunder consideration. Effective marketing programs thusdepend upon a thorough understanding of how marketingstrategy should differ with the type of organization beingtargeted and the products being sold.**

## Features of Industrial Market

**Some of the important features or characteristics of Industrial Marketing in Economy are being listed below:**

- **With the initiation of various industrial development programmes there have been an improvement of employment opportunities for the rural poor. One of the biggest cause behind the steady growth of industrial market is that it is not exploited and also yet to be explored.**

- **The industrial market is vast and offers excess of opportunities in comparison to the urban sector. It covers the maximum population and regions and thereby, the maximum number of consumers.**

### Strategies for Industrial Marketing

**The secret of success for industrial internet marketing comes down to four things. These should be the focus of any industrial marketing strategy because doing these three things well will likely make you the online authority in industry.**

Strategies that may be helpful in improving marketing in rural areas are listed below

A. Product Strategies

B. Pricing Strategies

C. Distribution Strategies

D. Promotion Strategies

E. Marketing Strategies

F. Sales Strategies

A. **Product Strategies:**

By making the product available in small and low price packing, a company can attract villagers because larger pack sizes may be out of reach for rural consumers because of their price and usage habits. New product designs or modified designs that are specially meant for rural areas keeping their lifestyles in view. Sturdiness of a product either in terms of weight or appearance is an important fact for rural consumers. And the brand name awareness in the rural areas has fairly increased. A brand name and is very essential for rural consumers to remember the product.

B. **Pricing Strategies:**

The pricing strategy for rural market will depend upon the scope for reducing the price of the product to suit the rural incomes and at the same time not compromising with the utility and sturdiness of the product. This is a technique which can be tried to evolve cheaper products by substituting the costly raw material with the cheaper one, without sacrificing the quality or functional efficiency of the product.

C. **Distribution Strategies:**

Most of the manufacturers and marketers can arrange for distribution to villages using the strategies, One of the way of distribution to rural area can be using delivery vans which can serve two purposes-it can take product to consumer in every nook and corner of the market and it also enables the firm to establish direct contact with them and thereby facilitate sales promotion.

D. **Promotion Strategies:**

Mass media is a powerful medium of communication and other strategies that can be followed to promote the product in rural market. Companies should picking up models, actors for advertisements as this will help them to show themselves as company. Companies may promote sports teams so that they can associate themselves within country. The internet is the most powerful tool for consumers ever created. It is also the most powerful advertising medium ever invented. Failure to take advantage of it is the

biggest mistake your manufacturing firm can make. The internet should be the center of any manufacturing marketing strategy.

E. **Marketing Strategy:**

Industrial marketing involves more intensive personal selling efforts as compared to urban marketing. Firms should refrain from designing goods for urban markets and subsequently pushing them in the rural areas. To effectively tap the industrial market a brand must associate it with the same things the rural people do. This can be done by utilizing the various rural informal media to reach them in their own language.

F. **Sales Strategy:**

Industrial sales strategy will include hiring employees genuinely like spending time in the rural areas and who are comfortable with the local language. Marketers can continuously assess all aspects of the business by interacting with the people and their family members personally, evaluating product choices for popularity and keeping favorites on the list.

## Conclusion

Industrial marketing often involves competitive tendering. This is a process where a purchasing organization undertakes to procure goods and services from suitable suppliers. Due to the high value of some purchases and the complexity of such purchases, the purchasing organization will seek to obtain a number of bids from competing suppliers and choose the best offering. An entire profession (strategic procurement) that includes tertiary training and qualifications has been built around the process of making important purchases.

Industrial Marketing is a developing concept, and as a part of any economy has untapped potential; marketers have realized the opportunity recently. Improvement in infrastructure and reach promise a bright future for those intending to go rural. The vital role industrial marketing have to play in the economic development of a developing country, is beyond doubt at present. An intensive effort in order to provide the basic facilities to rural consumers is the need of the hour. Sri Lankan industrial marketing system should be made much morecompetitive by infusing competition within the country and preventing the external system equation from interfering with the local markets in the larger interests of the nation.

**Thanushiya Liston Ramesh**
Development Officer,
Department of Rural Industries,
Eastern Province.



# இலங்கையில் நெசவுத் தொழிலின் வருகையும் அதன் வளர்ச்சியும்

ஆரம்ப காலகட்டத்தில் மனிதன் தென்னை ஓலை, பனையோலை, பனையகணி, மரல்நார், நறை நார் முதலியவற்றைக் கொண்டு பெட்டி, கடகம், பேழை, பிழா, வட்டி, வலை முதலியவற்றை செய்யத் தெரிந்து கொண்டிருந்தான். பின்னர் பருத்தியில் இருந்து பஞ்செடுக்கவும், நூல் நூற்கவும், ஆடை நெய்யவும் தெரிந்து கொண்டிருந்தான். அவ்வாறு நூல் நூற்கவும், ஆடை நெய்யவும் மனிதன் தெரிந்து கொண்ட காலம் எது? என்பது யாருக்கும் தெரியாது. அது நிகழ்ந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கலாம். சங்க காலத்தில் பருத்தி நெசவுத் தொழில் பெற்றிருந்த வளர்ச்சியைச் சங்க நூல்கள் நமக்கு காட்டுகின்றன.

“சுமார் 2500 வடங்களுக்கு முன் விஜயனும் அவனைச் சேர்ந்தவர்களும் இலங்கைக்கு வந்தார்கள். விஜயகுமாரனைச் சந்தித்த குவேனி என்பவள் நூல் நூற்றுக் கொண்டிருந்தாள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்பே சீலை நெசவு செய்யப்பட்டதென்பது அறியக் கிடைக்கின்றது.”. சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தே தமிழகத்தில் உள்ள ஒரு இனமான செங்குந்தர் என்றழைக்கப்படும் கைக்கோளர் சோழர் காலத்தில் அரச மானியம் பெற்று இந்தியாவிலே இத் தொழிலை மேற்கொண்டு வந்தனர்.

சோழர் காலத்திற்கு பிறகு (13 ஆம் நூற்றாண்டு) படிப்படியாக நெசவுத் தொழிலுக்குள் நுளைந்தது. 17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தங்கள் குலத்தொழிலாகிய படைத்தொழிலை விட்டு முழுமையாக நெசவுத் தொழிலுக்கு மாறினார். சோழர்களின் இலங்கை மீதான சோழப்படை யெடுப்பின் போது அவர்களுடனேயே வந்து அவர்கள் திரும்பிச் சென்ற பின் சிலர் இங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டார்கள். தங்கிய சிறு தொகையினர் மட்டக்களப்பிற்கு தெற்கே கோட்டைக்கல்லாறு, ஆரயம்பதி, தாமரைக்கேனி ஆகிய இடங்களிலும் யாழ்ப்பாணத்தில் நல்லூர் இராசதானியை அண்மித்த இடங்களிலும் குடியேறினர்.

இலங்கையில் குடியேறிய இக்குலத்தவர்கள் இங்கு வந்தபின்பும் தமது தொழிலைத் தொடர்வதற்கான அரசமானியத்தைப் பெற்று பரம்பரையாக இத்தொழிலை கைக்கொண்டிருந்தனர்.

இவர்கள் தங்களுக்குத் தேவையான நெசவு மூலப்பொருட்களான பட்டு, பருத்தி முதலியவற்றை இந்தியாவிலிருந்து பெற்றுக்கொண்டனர் என்பது அறியக்கிடைக்கிறது. ஆரம்பத்தில் இக்குலத்தவர்கள் பருத்திப் பஞ்சுகளைக் கொள்வனவு செய்து தாங்களே நூல் நூற்றதாக அறிய முடிகின்றது. இதனைப் நூல் திரித்தல்” எனக் குறிப்பிடுகின்றனர். பின்னர் பட்டு, பருத்தி போன்றவற்றை நூல்களாகவே பெற்றுக்கொண்டுள்ளனர். அக்காலத்தில் போக்குவரத்துக்கள் அதிகமாக இல்லாத காரணத்தினால் தெருக்களில் நூல்வாப்பிட்டு மிக நீளமாக கஞ்சி இட்டனர். கஞ்சியிடுவதற்கு மரவள்ளிக்கிழங்கை அவித்து அதனை நூல்த்துணியில் தோய்த்து துணியின் இரண்டு நுனிப்பக்கங்களையும் பிடித்து நூல்களுக்கு மேல் பிழிந்து கஞ்சியிட்டனர். இவ்வாறு கஞ்சியிட்ட பின்னர் நூல்கள் ஒன்றன்மேல் ஒன்று ஒட்டாத வண்ணம் நூல்களைக் காயவிடுவர். காய்ந்த பின் நூல்களுக்குச் சாயமிடுவர்.

ஆரம்பகாலத்தில் இயற்கைச் சாயங்களை கண்டல் தாவரங்களிலிருந்தும், குறிப்பிட்ட சில மரங்களின் பட்டைகளிலிருந்தும், இலைகளிலிருந்தும் தயாரித்து

இருக்கின்றனர். பின்னர் செயற்கைச் சாயங்களைப் பெற்று நூல்களுக்குச் சாயமிட்டதாகவும் அடுத்த கட்டமாக சாயமிட்ட நூல்களைக் கொள்வனவு செய்து துணி மற்றும் ஆடைகளை நெய்ததாகவும் அறிய முடிகிறது. இவ்வாறான படிமுறைகளின் பின்னரே ஆடைகளையும், தங்களுக்குத் தேவையான துணிகளையும் நெய்தெடுப்பர்.

1890 களில் மட்டக்களப்பு கோட்டைமுனையில் இக்குலத்தவர்களிடம் மருதமுனையைச் சேர்ந்தவர்களும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்களும் சென்று கூலிக்கு நெசவு செய்ததாகவும் கூறப்படுகின்றது. இன்னும் சிலர் அவரிடம் நூல்களைப் பெற்று வந்து உற்பத்தியை மேற்கொண்ட பின்னர் மீண்டும் முடிவுப் பொருட்களை அவரிடமே ஒப்படைத்த தகவல்களும் உள்ளன. இவ்வாறு சென்று பயிற்சிகளைப் பெற்ற பின்னர் இவர்கள் தாமாகவே இத் தொழிலைச் செய்யத் தொடங்கினர். இவ்வாறு உருவாகிய நெசவு ஏறக்குறைய 350 வருடங்களுக்கு முன்னர் மருதமுனையில் தொடங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. இவர்கள் மட்டக்களப்பில் இருந்து மட்டக்களப்பு வாவியினூடாக மருதமுனைக்கு நூல்களை கொண்டுசென்றதாக மருதமுனையின் வரலாற்றினை எழுதிய புலவர்மணி குறிப்பிடுகின்றார்.


மருதமுனையில் முதலில் நிலத்தின் கீழ் அமைந்த குழித்தறி மூலமாகவே நெசவு செய்யப்பட்டது. பின்னர் இந்தியாவில் இருந்து வியாபாரத்துக்கு வருகை தந்தவர்கள் மூலமும் வியாபாரிகள் மூலமாகவும் இந் நடைமுறையானது சற்று முன்னேறியது. இத்தகைய தகவல்கள் மூலம் மருதமுனையின் நெசவானது நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்ததை அறியக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் நிலத்துக்கு மேல் இருந்து நெசவு செய்யக் கூடிய 'கைத்தறிகள்' 1900 களில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. நூலை வாப்புச் செய்வதற்கு தேவையான நூலைச் சுற்றுவதற்கு 'கட்டை' என்னும் உபகரணமும் பயன்படுத்தப்பட்டது. அதே வேளை 'வாப்பு றோல்' அறிமுகம் செய்வதற்கு முன்னர் எல்லா வேலைகளும் கைகளினாலேயே செய்யப்பட்டன. ஒரு வாப்பு செய்து 'பா' ஓடி முடிப்பதற்கு பல நாட்கள் தேவைப்பட்டன.

கைத்தறி நெசவுத் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக காலப்போக்கில் பல நெசவுத்தறிகள் கண்டு பிடிக்கப்பட்டு புளக்கத்திற்கு கொண்டு வரப்பட்டன. அந்தவகையில் பேட்டுப்பொறி (Dobby Machine), பெரல் பேட்டுப் பொறி (Barrel Dobby Machine) இலற்றிசு பேட்டுப் பொறி (Lattice Dobby Machine), துரோபோய் பேட்டுப் பொறி (Drawboy Dobby Machine) தப்பற்றுப் பேட்டுப் பொறி (Tappet Dobby Machine), இயக்காட்டுப் பொறி, வலுத்தறி (Jacquard loom) முதலிய பொறி வகைகள் கண்டு பிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

ஆரம்ப காலத்தில் பருமனான நூல்களினால் பெண்கள் அணியக்கூடிய பால் சோமன், சலங்கைச் சோமன், மருதமூட்டுச் சோமன் என்பன உற்பத்தி செய்யப்பட்டன. ஆண்களுக்காக கனமான சாரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டன. காலப் போக்கில் பெட்சீட்டுக்கள், சால்வைகள் என்பனவும் உற்பத்தி செய்யப்பட்டன. அதன் பின்னர் 1960 களில் ஒத்தை மூட்டுச் சாறன்கள், இரட்டை மூட்டுச் சாறன்கள் மற்றும் மெல்லிய சேலைகளும் உற்பத்தி செய்யப்பட்டன. அக்காலத்தில் பூப்போட்ட சேலைகளும், கைக்குட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டன. சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரையில் உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் தூர இடங்களுக்குக் கொண்டு சென்று வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

நெசவுத் தொழிலானது தற்போது மருதமுனையிலும் காத்தான்குடியிலும் கல்முனைக் குடியிலும் குடிசைக் கைத்தொழிலாக காணப்படுகின்றது. 1950 களிலும் 1960 களிலும் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டிருந்த இத்தொழிலானது 1970, 1977 இற்கும் இடைப்பட்ட காலத்தில் மிகவும் கிராக்கியான தொழிலாக காணப்பட்டது.

நெசவுத் தொழிலைப் பொறுத்தவரை மிகவும்



நெசவுத் தொழிலைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால், வருடம் முழுவதும் இதற்கான கிராக்கி இருப்பதில்லை. புத்தாண்டு காலங்களில் குறிப்பாக சித்திரைப் புத்தாண்டு மற்றும் முஸ்லிம்களின் இரண்டு பெரு நாட்களில் அதிக தேவை ஏற்படுகின்றது. மழைக் காலங்களில் உற்பத்தி பாதிப்படைகின்றது.


பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் இன்மையும், அதிகமான இளைஞர்களும் புதியவர்களும் இத்தொழிலில் நுழையாமல் இருப்பதும் இத்தொழிலின் பின்னடைவுக்குக் காரணமாகும். மேலும் உற்பத்தியில் ஈடுபடுகின்ற சிலர் தரமற்ற உற்பத்திகளையும், சாயமிடுதலில் தரமற்ற சாயங்களையும் இடுவதனாலும் தரமான நூல்கறுடன் தரமற்ற நூல்களை கலப்படம் செய்வதனாலும் சந்தை வாய்ப்பு இழக்கப்படுகின்றது. சந்தையில் போட்டி போட்டுக் கொண்டு இந்திய உற்பத்திகள் சந்தையில் கிடைக்கின்றன.

இலங்கையும், இந்தியாவும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியான காலநிலையினைக் கொண்ட நாடுகள். இந்தியாவில் பருத்தி விளைவிக்கும்போது இலங்கையிலும் பருத்தி விளைவிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் இருக்கும். ஏனெனில் இலங்கையில் பருத்தி விளைவிக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு, சமீப காலங்களிலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையினையும் அறியமுடிகின்றது. எனவே இதனை அரசோ, தனியார்களோ நடைமுறைப்படுத்தும்போது நெசவுத்தொழிலுக்கான மூலப்பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அத்தோடு இங்குள்ளோர் தங்களுக்கு ஏதுவான உடைகள் எவையென்பதைக் கண்டறிந்து அவ்வுடைகளை கொள்வனவு செய்து அணியத் தொடங்குவர் எனின் எமது பாரம்பரியத் தொழிலை மீட்டெடுப்பதோடு, எமது உள்ளூர் பொருளாதாரத்தையும் வளப்படுத்த முடியும்.

ஆக்கம்:-

**திருமதி.ஆர்.றிபாஸ்**
உதவிப்பணிப்பாளர்,
கிராமியத்தொழிற்துறைத்திணைக்களம்,
அம்பாறை.


# தும்பு உற்பத்திகளும் கிராமிய தொழிற்துறை திணைக்களத்தால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளும்.



கிராமிய தொழில்கள் என்னும் போது கிராம மட்டத்தில் பெறப்படும் உற்பத்தி பொருட்களை கொண்டு கிராமத்தில் வாழும் மக்களால் கிராமிய தொழில்நுட்பங்களையும், பொறிகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய தொழில்களை குறித்துநிற்கும். கிராமிய தொழிற் துறையினுள் முதலிடம் பெறுவதும் எக்காலத்துக் கும் பொருத்தமானதுவும் தும்புத் தொழில்கள் என்றால் அது மிகையில்லை. நெசவு, மரவேலை, வனைதல் தொழில், ஓலைத்தொழில் என பல்வேறு குடிசைக் கைத்தொழில்கள் காணப்படுகின்றபோதி லும் ஒவ்வொரு கிராம மட்டத்திலேயும் மூலவளங்க ளை பெற்றுக்கொள்ளக் கூடியதுவும், மூலவளப் பற்றாக்குறை அற்றது அல்லது மூலவளங்களை மீள்பெறுகைக்கு உட்படுத்துத்தக்கூடியதும், மூலவள ஆதாரங்களையும் அவற்றின் வளர்ச்சியை யும் பாதிக்காததுமான மிகைவிளை மூலவளமாக தென்னை மற்றும் தாழை மரங்களின் தும்புகள் கிடைக்கின்றன.

தென்னை மற்றும் பனை மரங்கள் பூவுலகின் கற்பகதருக்கள் எனப்படுகின்றன. கற்பகதரு என்பது தனது அனைத்து பாகங்களும், விளைபொருட்க ளும் மனிதர்களின் பயன்பாட்டுக்கு உதவுவதாக அமையப்பெற்றிருந்த ஒரு தேவலோக மரமாகும். அதேபோன்று பயன்பாடுடையவைகள் தான் தென்னை மற்றும் பனை மரங்களும். இவற்றில் குறிப்பாக தென்னை மரத்தின் விளைபொருளான தேங்காயின் கழிபொருளாக அகற்றப்படும் தேங்காய் மட்டைகளே தும்பு தொழில்துறைக்கான மூலவளப் பொருட்கள் ஆகும். தேங்காய் மட்டைக ளை பதப்படுத்தி பெறப்படும் தும்புகளிலிருந்து பல்வேறு வகையான வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் தும்புத் தொழிலானது மிகவும் பழமை வாய்ந்த குடிசைக் கைத்தொழிலாக காணப்படுவதுடன், தற்போதும் பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டுவருவதவாத உள்ளது. ஆரம்பகாலங்களில் கிராமங்களிலுள்ள மக்கள் தேங்காய் மட்டைகளை சேகரித்து அருகிலுள்ள ஆற்றங்கரைகள், நீர்நிலைகளில் மொத்தமாக அமிழ்த்திவைத்து ஓரிரு மாதங்களின் பின்னர் அவற்றை வெளியில் எடுத்து கழுவி சுத்தம் செய்து தேங்காய் மட்டையின் மேற்தோலை உரித்து அகற்றி உள்ளிருக்கும் தும்புகளை எடுத்து கட்டைகளால் அடித்து பதப்படுத்தி தும்பு நார்களை பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு



பெற்றுக்கொள்ளப்பட்ட தும்புநார்களினை மண்சட்டிகள் மேல் வைத்து கைகளால் உருட்டியும், திரட்டியும் கயிறுகள் திரிக்கப்பட்டன. இக்கயிறுகளில் இருந்து கட்டுக்கயிறு, உப்பட்டிக் கயிறு, தும்புத்தடி போன்ற பொருட்கள் செய்யப்பட்டுவந்தன. இதுவே முற்காலத்தில் தும்பு தொழில் செயல்முறைகளாக காணப்பட்டன.

தும்பு தொழிலானது நவீன யுகத்தின் எந்திர, தொழிநுட்ப வளர்ச்சிக்கேற்ப பல்வேறு மாற்றங்களை உள்வாங்கி இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. இறப்பர், பிளாஸ்ரிக், மற்றும் நைலோன், ரேயோன் முதலிய செயற்கை நூலிழைகள் என்பவற்றின் ஆதிக்கத்தின் மத்தியிலும் நல்ல, தரமான தும்பு உற்பத்தி பொருட்களுக்காக சந்தை திறந்தநிலையிலேயே காணப்படுகின்றது. சூழலுக்கு ஒத்திசைவானதாகவும், இயற்கையோடு ஒட்டியதாகவும், இரசாயன மாற்றங்களுக்கு உட்படாததாகவும், கழிவு முகாமைத்துவத்துக்கு இடைஞ்சலற்றதாகவும் காணப்படும் தரமும் மலிவுமான தும்பு உற்பத்தி பொருட்களை அனைவரும் விரும்பி வாங்குவதில் வியப்பேதும் இல்லை.

